பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 06 திங்கட்கிழமை (22.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :269

போர்நிறுத்த நடைமுறை குறித்த

# அரசு-புலிகள் பேச்சுக்கு

# ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு!

## ஒப்பந்தத்தை உச்சமாக மீறுவோருடன் பேசக்கூடாது என்று கூறுகிறது அக்கட்சி

கொழும்பு, ஓகஸ்ட் 22

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாக - முழுமையாக - நடைமுறைப்படுத்துவது குறித்து அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் விரைவில் நடைபெறவுள்ள நேரடிப் பேச்சுகளை அரசின் முன்னாள் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. மிகக் கடுமையாக எதிர்த்துள்ளது. உடன்படிக்கை மீறலின் உச்சமாக அமைச்சர் கதிர்காமரையே படுகொலைசெய்த விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்த நடைமுறைச் செயற்பாடு குறித்து பேசுவதில் எந்தப் பயனும் இல்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

புலிகளுடன் மீண்டும் பேச்சு நடத்தும் அரசின் செயல் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றியைப் பாதிக்கும் என்றும், சு.க. கோரும் ஆதரவைத் தமது கட்சி நிராகரித்துவிடும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது என்றும் ஜே.வி.பியின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான சந்திரசேன விஜேசிங்க தெரிவித்தார்.

"நாட்டிற்கு போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தேவைதான். என்றாலும் அது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை" என்றார் ஜே.வி.பியின் முன்னாள் அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரசேன விஜேசிங்க. அரசு - புலிகள் இடையே நடைபெறவுள்ள பேச்சுக் குறித்துக் கேட்டபோது நேற்று 'உதயனு'க்கு அவர் இப்படிக் கூறினார். இது விடயத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனநாயகம் குறித்துக் கிஞ்சித்தும் கவலை கொள்ளாது, போர்நிறுத்த ஒப்பந்த மீறலின் உச்சக்கட்டமாக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான அரச பிரதிநிதிகள் இவ்வாரம் அறிவிப்பு

கொழும்பு, ஓக.22

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் நடத்தவுள்ள பேச்சுகளில் கலந்துகொள்ளும் அரசதரப்புப் பிரதிநிதிகளை ஜனாதிபதி இவ்வாரம் தெரிவுசெய்து அறிவிப்பார் என்று கூறப்படுகின்றது. (16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலை, ஓக. 22

திருகோணமலை மாவட்டம் அநுராதபுரம் சந்தியில் நேற்று இரவு 8.10 மணியளவில் இனந்தெரியாதநபர்கள் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் ஊர்காவற்படையினர் ஒருவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த சமிந்த என்ற நபராவார் என்று திருமலைப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## கதிர்காமர் கொலை விசாரணைக்கு உதவ பிரிட்டன், அமெ. தயாராம்

கொழும்பு, ஓக.22

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக இடம்பெற்றுவரும் விசாரணைகளுக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் உதவ முன்வந்துள்ளன என பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

"இந்த விசாரணைக்கு அமெரிக்கா மற்றும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியினருடன் உடன்பாடு எதுவும் கூடாது; பிரதமருக்கு எதிராக அமைச்சர்கள் போர்க்கொடி!

கொழும்பு, ஓக.22

பிரதமரும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியினருடன் எந்த ஒரு தேர்தல் உடன்பாட்டுக்கும் வரக்கூடாது என்று கட்சியின் மூத்த உறுப்பினர்களும், அமைச்சர்களும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். தமது எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் பிரதமர் நடந்துகொண்டாரானால் ஜனாதிபதித் தேர்தலின் போது பிரதமருக்காக பிரசார நடவடிக்கைகள் எதிலும் தாம் ஈடுபடப்போவதில்லை எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர், ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ, அக்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருடன் இரகசியமான முறையில் பலசுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளார். இந்தப் பேச்சுக்களின்போது இரு தரப்புக்களிலும் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச முன்னர் அரசு அவர்களைத் தடைசெய்யவேண்டும்

### ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு, ஓக.22

சமாதான ஒப்பந்தத்தைப் பாதுகாப்பது தொடர்பாக புலிகளுடன் பேசுவதாயின் அதற்குமுன் அந்த இயக்கத்தை அரசு இலங்கையில் தடைசெய்யவேண்டும். இல்லையேல் இப்பேச்சு புலிகளை மேலும் வளர்த்துவரும் செயலாக அமைந்துவிடும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து சமாதான ஒப்பந்தத்தைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு புலிகளுடன் பேச்சு நடத்த முன்வந்துள்ளது. இப்பேச்சு புலிகளை மேலும் வளர்த்துவிட வழிசமைக்கும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் சர்ச்சை குறித்து உயர்நீதிமன்றில் இன்று விசாரணை

கொழும்பு, ஓக.22

இவ்வருடமே ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக்கோரி ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வண. ஓமல்பே சோபித தேரர் தாக்கல் செய்துள்ள மனு உயர்நீதிமன்றத்தில் ஐந்துபேர் கொண்ட நீதியரசர்கள் குழு முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையில் நீதியரசர்களான நிஹால் ஜயசிங்க, நிமல் திஸநாயக்க, என்.கே. உதலாகம, நிமல் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெறமாட்டாதெனத் தமக்கு அறியக்கிடைத்திருப்பதால் அதுபற்றிய நிலையைத் தெரியப்

(16ஆம் பக்கம் பார்க்க)

கண்டனங்களோடு நின்றுவிடாது

## ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுக்க அனைவரும் ஓரணியில் திரளவேண்டும்!

### வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.22

கண்டனங்களை வெளியிடுவதோடு நின்றுவிடாது ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுக்க அனைவரும் அணிதிரளவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தி அறிக்கை விடுத்துள்ளது வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம். கொழும்பில் உள்ள 'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனை மீது நடத்தப்பட்ட கிரனேட் வீச்சுத் தொடர்பாக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இந்தக் கண்டன அறிக்கையை விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியத்தின் குரலான ஊடகங்களை வாய்மூடி மௌனியாக்குவதன் மூலம் தாம் வெற்றிபெற நினைக்கும் சக்திகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சேதுகால்வாய் திட்டத்தை எதிர்த்து இந்தியத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

### நாளை நடத்துவதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஓக. 22

சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை எதிர்த்து நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பு காலிமுகத்திடலுக்கு அருகில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்திற்கு முன்பாக நண்பகல் 12 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

'சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்' என்ற அமைப்பு இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)






ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, மாமுனைப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு மனித நேய நம்பிக்கை நிதியம் படகுகள், படகு இயந்திரங்கள் வலைகள் ஆகியவற்றை வழங்கியது. இதற்கான நிகழ்வு நேற்றுமுற்பகல் மாமுனை பொது மண்டபத்தில் இடம்பெற்றது. அவ்வேளையில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வின் ஆரம்பத்தில் அகவணக்கம் செலுத்தப்படுவதனையும் மனிதநேய நம்பிக்கை நிதியத் தலைவர் வி.கைலாசபிள்ளை, அமெரிக்காவிலிருந்து வருகைதந்தவரான சத்திரசிகிச்சை நிபுணர் விக்னேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் மனிதநேய நம்பிக்கை நிதிய நிர்வாக உறுப்பினர் திருமதி அபிராமி விக்னேஸ்வரன், நிதியத் தலைவர் வி.கைலாசபிள்ளை, கிளி நொச்சிமாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் மாதிரிப் படகை வழங்கி உத்தியோகபூர்வமாகப் படகுகளைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*





# நோர்வேயை ஓரங்கட்ட தெற்கிலுள்ள சகல கட்சிகளும் இணையவேண்டும்!

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு,ஓக.22

சமாதானச் செயற்பாடுகளிலிருந்து நோர்வேயை ஓரங்கட்ட தெற்கிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் கைகோத்துச் செயற்பட முன்வரவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக இந்தியா,பாகிஸ்தான்,ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்படவேண்டும் என்றும் -

ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் கருத்துத்தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப் புலிகள் வசமிருக்கும் விமான ஓடுபாதைகளை அழிக்க இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று உடனடியாக அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொலைகள் நிறுத்தப்படுவது தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு அறிவுறுத்தும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்றும் -

அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. (எ-206)

# வேலணைப் பகுதியில் பெண்களுக்கு தொழிற்பயிற்சி

மகளிர் அபிவிருத்தி நிலையம் வேலணைப் பகுதியிலுள்ள பெண்களுக்காக பன்ன வேலை மற்றும் தையல் பயிற்சிகளை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளது.

இதில் பனை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர் இன்று மு.ப. 10 மணிக்கு பன்னவேலைப் பயிற்சியை நடத்தவுள்ளார். இப் பயிற்சிகள் வேலணை சாட்டி வீதியில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளன. (ஒ)

# குருதிக் கொடையாளர் கழகம் யாழில் நேற்று அங்குரார்ப்பணம்

யாழ்.மாவட்ட குருதிக் கொடையாளர் கழகம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற குருதிக் கொடை வழங்குபவர்களுக்கான கலந்துரையாடலின் பின்னர் இந்தக் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஆர்.முரளிதரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் மங்கள விளக்கை வடமாகாண பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு அதிகாரி டாக்டர் சிவசங்கர், டாக்டர் கே.அகிலன் மற்றும் இரத்த வங்கிப் பிரிவின் சுகாதாரப் பரிசோதகர் ரவினதாஸ், குருதிக்கொடையாளர் சார்பாக சக்திவேல் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து கலந்துரையாடலும், குருதிக் கொடையாளர் கழக அங்குரார்ப்பண நிகழ்வும் நடைபெற்றன. (ஒ-ரி)

# தொண்டு நிறுவனங்களின் பட்டியலில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை நீக்குக

## ஜனாதிபதியிடம் ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு,ஓக.22

விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பட்டியலில் இருந்து நீக்கவேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது ஜே.வி.பி.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் எந்தவோர் உரிமைகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வழங்கப் படக்கூடாது எனவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி உள்ளீர்க்கப்படுவதைத் தடுப்பது தொடர்பாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரால் தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தைப் பிரயோகித்து, அரச சார்பற்ற நிறுவனங்களின் பட்டியலிலிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை ஓரம் கட்டும் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியும் எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி., அது முன்னாள் வெளிவிவகார அமைச்சரைக் கௌரவிப்பதாக அமையுமெனவும் தெரிவித்துள்ளது.

தமிழர்புனர்வாழ்வுக் கழகத்துக்கு நிதி சேகரிக்கும் செயற்பாடுகளுக்கு ஏற்கனவே பிரித்தானிய அரசு தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-206)




## 'உதயன்' - 'சுடர் ஒளி' பணிமனை மீது தாக்குதல்:

# சமூகவிரோதிகளின் ஈனச் செயல்

**- பெ.சந்திரசேகரன் -**

மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் குண்டுவீச்சுச் சம்பவத்தைப் பலமாகக் கண்டித்து உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி'க்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகையின் கிளை அலுவலகத்தின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியிருப்பது வெளிச்சத்தைக் கண்டு அஞ்சும் சமூகவிரோதிகளின் செயலை ஒத்ததாக இருக்கின்றது. தம்மைப் பற்றிய உண்மைகள் பத்திரிகைகளில் வெளிவருவதை ஜீரணிக்க முடியாதவர்களின் ஈனச் செயலாகவே இதைக் கருதவேண்டியுள்ளது. - என்று சந்திரசேகரன் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் தமது வன்மத்தைத் தீர்த்துக்கொள்ளும் மிலேச்சத்தனம் சமீபகாலமாக மிகமிக அதிகரித்திருக்கிறது. விமர்சனத்தைத் தாங்கிக் கொள்ளும் திராணியற்றவர்களும் தமது அரசியல் நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த சமூகமும் பாதிக்கப்படுவதை உணராதவர்களும் பொதுவாழ்வில் ஈடுபடக்கூடாது. புகழ் மாலைகளை மட்டுமே ஊடகங்கள் தமது கழுத்தில் அணிவிக்கவேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கக்கூடாது.

இத்தகைய சண்டித்தனங்களுக்கு சொந்தக்காரர்களை மக்கள் இனங்கண்டு பொது வாழ்விலிருந்து அவர்களைத் தூக்கியெறிய வேண்டும். பேனா வலியது என்பதை உணராதவர்களுக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

- இப்படிச் சந்திரசேகரன் குறிப்பிட்டிருக்கிறார்.

# ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்

**செ.கஜேந்திரன்**

கடந்த சனிக்கிழமை மாலை 5.20 மணியளவில் கொழும்பில் அமைந்துள்ள 'உதயன்'- 'சுடர் ஒளி' அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் தமிழ் ஊடகவியலாளர்களுக்கும், ஊடக சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். சிங்களப் பேரினவாதிகளினதும், அதன் அடிவருடிகளினதும் திட்டமிட்ட செயற்பாடாகவே இதனை நாம் கருதுகின்றோம்.

- இப்படி யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'உதயன்' பத்திரிகை யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தினரின் அராஜகங்களைத் துணிச்சலோடு வெளிப்படுத்தி வருவதன் மூலம் தமிழ்த் தேசியத்திற்காக கடுமையாக உழைக்கின்ற பத்திரிகைகளில் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது.

அதன் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' கொழும்பிலிருந்து கொண்டே தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான கருத்துக்களையும், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகளையும், கருத்துகளையும் துணிச்சலுடன் பிரசுரித்து வருகின்ற பத்திரிகையாகும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியப் பற்றுள்ள ஊடக வியலாளர்களான நிமலராஜன், நடேசன், சிவராம் போன்றவர்கள் படுகொலை செய் யப்பட்டுள்ளனர்.

அரசு துணை ஆயுதக்குழுக்களைத் தம்மோடு வைத்துக்கொண்டு அவர்களுக்கு ஆதரவளித்துவருவதன் விளைவாகவே இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இத்தாக்குதலுக்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நடைபெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ளாத வகையில் நீதி விசாரணை ஒன்றை நடத்தி குற்றவாளிகளை இனங்கண்டு தண்டனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதன் மூலம் தமிழ் ஊடகவியலாளர்களது உயிருக்கு உத்தரவாதமளிக்கப்படவேண்டும் என்பதுடன் கருத்துச் சுதந்திரம், ஜனநாயக சுதந்திரம் என்பன பாதுகாக்கப்படவேண்டும். தவறினால், அரசு எதிர்காலத்தில் பாரிய பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் இப்படிக் கஜேந்திரன் எம்.பி. குறிப்பிட்டிருக்கிறார்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சிறுபிள்ளைத்தனம் ஏனோ?

தமிழ் மக்கள் தொடர்புடைய எந்த விடயமானாலும் அதற்குள் மூக்கை நுழைத்துக் குழப்புவது தென்னிலங்கைச் சிங்கள - பௌத்த பேரினவாதிகளிடம் ஊறிப்போன ஒரு பழக்கம். தமிழர்களின் உரிமைகளை வழங்காமல் அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக, அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக வைத்திருக்கவேண்டும் என்ற மேலோங்கித் தனமான குணாம்சத்தின் வெளிப்பாடு அது.

மூன்றரை வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் சேடம் இழுத்துக்கொண்டு இருக்கிறது. அதன் உயிர் - ஆவி - இன்று பிரியுமா நாளை பிரியுமா என்ற நிலையில் ஊசலாடுகிறது. அதனைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும்? நோய் நாடி, நோயின் குணம் நாடி வைத்தியம் செய்வதே அதற்கான முதற்பணி.

கடந்த சுமார் ஒன்றரை வருட காலத்திற்கு முன்னரே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வியாதி பீடித்துவிட்டது. ஆனால், அதற்குரிய வைத்தியம் பார்க்கவேண்டும் என்பதில் எவருக்கும் அக்கறை பிறக்கவில்லை. இறுதிவரை இருக்கவில்லை.

ஆரம்பத்திலேயே அந்த நோய்க்குச் சிகிச்சை அளித்திருந்தால், இப்போதைய நிலை வந்திருக்காது. இது ஆரம்ப வகுப்பு மாணவனுக்கும் தெரிந்த ஒன்றே. ஆனால், அரசியல் நடத்துவோருக்கு அது புரியவில்லை.

எப்படியாயினும், தீமையிலும் ஏதோ ஒரு நன்மை இல்லாமலா போகும்? - என்ற ''சித்தாந்தத்தின்'' பிரகாரம் கதிர்காமரின் கொலையின் பின்விளைவாக, அல்லது பலனாக, போர்நிறுத்த ஒப்பந்தத்தை - புரிந்துணர்வு ஒப்பந்தத்தை - அது இறந்துபோகவிடாமல் தடுக்கவேண்டும் என்ற கருணை ஜனாதிபதி சந்திரிகாவுக்குப் பிறந்தது.

மாதங்கள் பல கழிந்து - கடந்து - சென்ற பின்னரே ஜனாதிபதி அம்மையாருக்கு இரக்கம் பிறந்திருந்தாலும், தாமதமாகியே அக்கறை வந்திருந்தாலும், அவரது முயற்சி கைகூடியிருப்பது அனுகூலமான சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

ஆம். உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு வைத்திய சிகிச்சை அளிக்க இப்போதுதான் ஏற்பாடாகியிருக்கிறது. அதாவது கடந்த ஒன்றரை வருட காலமாக அந்த ஒப்பந்தம் செம்மையான முறையில் கடைப்பிடிக்கப்படவில்லை. அதனால், கொலைகள் பெருகியும் போர்நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டும் வன்முறைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன.

ஒப்பந்தத்தோடு சம்பந்தப்பட்ட தரப்புகள் செம்மையற்ற செயலாக்கம் குறித்து ஒருவர் மீது மற்றவர் குற்றஞ்சாட்டியதோடும் குறைகூறியதோடும் காலம் கடந்துபோனது; நோய் முற்றியது.

இப்போதுதான், நோய்க்குச் சொட்டு மருந்து கொடுக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப ஒப்பந்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் வழிவகைகளை, செயல்வடிவங்களை ஆராய்வதற்காக அரசு - புலிகள் உயர்மட்டப் பேச்சு நடைபெறவுள்ளது.

அனுசரணையாளரான நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் இந்தப் பேச்சுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அந்தப் பேச்சுகள் வெற்றிகரமாக அமைந்து, ஒப்பந்தம் கைச்சாத்தாகிய ஆரம்பத்தில் இருந்தது போன்ற சீரான போர் நிறுத்தம் நிலைக்கவேண்டும் என்பதே சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் விருப்பம்.

ஆனால், புத்தபெருமானின் போதனைகளைப் பரப்பி, சாந்தி, சமாதானம் நிலவ உழைப்பதற்கு உறுதி எடுத்த பௌத்தபிக்கு ஒருவர், நோயாளிக்குக் கொடுக்கப்படும் மருந்தைத் தட்டி ஊற்றிவிடவேண்டும் என்று புலம்புகிறார்.

விடுதலைப் புலிகளுடன் எந்த ஓர் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்துவதாயினும் அனுசரணையாளராகச் சேவை புரியும் நோர்வேயை அப்புறப்படுத்தவேண்டும். விடுதலைப் புலிகளை நெருக்கடியிலிருந்து காப்பாற்றுவதிலேயே அந்நாடு கண்ணும் கருத்துமாக உள்ளது - என்று ஹெல உறுமயவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான பௌத்த பிக்கு அத்துரலிய ரத்னதேரர் விதண்டாவாதம் செய்திருக்கிறார்.

கருத்துச் சொல்வதற்கு எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. ஜனநாயகத்தின் அடிப்படைத் தேவைகளில் அதுவும் ஒன்று. ஆனால், அந்தக் கருத்து மக்களின் நலனுக்கு ஊறுவிளைவிப்பதாக இருக்கக்கூடாது. மக்கள் நலனைக் கெடுக்கும் ஊக்கியாக அமைத்தல் ஆகாது.

நோர்வேயை அனுசரணையாளர் பணியிலிருந்து நீக்கி, இந்தியா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகளை அந்த இடத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்பது அவரது 'அற்புதமான' ஆலோசனை. அவரே ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வந்தாற்கூட அந்த ஆலோசனையை இந்தக் கட்டத்தில் செயற்படுத்தமுடியாது.

அவ்வாறிருக்க -

சிறுபிள்ளைத்தனமாக வாயில் வந்ததை எல்லாம் கக்கி, மக்கள் நலன்சார் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போட நினைப்பவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருப்பது காலத்தின் கோலமே. ஊடகங்கள் மூலம் பிரபல்யம் அடைவதற்காக அரசியல்வாதிகள் கட்டவிழ்த்துவிடும் ஒவ்வாத கருத்துகளுக்கு இதனை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

தமது பதவிகளின் மதிப்பைப் பேணுவதற்கேனும் எதைச் சொல்லவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்ற விவஸ்தை தெரியாமல், கருத்து வெளியிடுவோர், அது மக்களுக்கு மட்டுமன்றி தமக்கும் பாதகம் செய்வதை உணர்வதில்லை.

போர்நிறுத்த ஒப்பந்தம் செவ்வனே நடைமுறையாவதற்கான முயற்சியையே கொட்டிக் குழப்பிவிட நினைக்கும் பௌத்த - சிங்கள பேரினவாதச் சிந்தனைப் போக்காளர்கள், இனப்பிரச்சினைக்கு நியாயமான, நீதியான தீர்வு கிடைக்க எவ்வாறு இடந்தருவார்கள் என்ற கேள்விக்கு நிரந்தரமாகவே பதில் கிடைக்கப்போவதில்லை. சிஹல உறுமய நாடாளுமன்ற உறுப்பினரின் 'அற்புதக்' கண்டுபிடிப்பு அதனையே ஊர்ஜிதப்படுத்துகிறது.

# தமிழ்மொழி மேம்பாட்டுத் திட்டங்களை பாடசாலைகளில் செயற்படுத்தப் பணிப்பு

வலி.தெற்கு,ஓக.22

தமிழ்மொழி கற்கும் மாணவர்களின் ஆற்றலையும் பொதுத்தேர்வுகளில் அவர்கள் பெற்றுக்கொள்ளும் அடைவு மட்டத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலைகளில் தமிழ் மொழிப் பாட மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்துமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் அறிவித்துள்ளார்.

தமிழ்மொழிப் பாடத்தை மேம்படுத்தல் தொடர்பான திட்டங்களைச் செயற்படுத்துமுகமாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்மொழிப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளை அமுல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களூடாகப் பாடசாலை அதிபர்களுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு வலயத்திலும் ஆரம்ப, இடைநிலைப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பணிக்காலப் பயிற்சிகள், கருத்தரங்குகளை ஒழுங்குசெய்து அவர்களின் பாட அறிவு, கற்பித்தல் திறன் என்பவற்றை உயர்த்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நடத்தப்பட்ட பயிற்சிகள், கருத்தரங்குகள், ஏனைய திட்டமிட்ட பயிற்சிகள், அதற்கான நிதிகள் போன்றவற்றில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றித் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

தமிழ்மொழிப் பாட மேம்படுத்தல் தொடர்பாகத் தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மொழித்திறன் பயிற்சிகள், வினாத்தாள் ஆக்கும் முறைகள், கற்பித்தல் நுட்பங்கள், துணைக் கருவிப் பயன்பாடு, கணிப்பீடு, மதிப்பீட்டுத் திட்டம் என்பவற்றில் தேர்ச்சியடையும் வகையிலான பல பயிற்சிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

மொழித்திறன் மேம்பாட்டை ஏற்படுத்தும் வகையில் பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப்போட்டிகள், மொழித்திறன் போட்டிகள், கையெழுத்துச் சஞ்சிகை ஆக்கம், பெற்றோருடனான ஒன்றுகூடல், கண்காட்சிகள் போன்ற செயற்பாடுகளும் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளன. (9-152)

# ஆனைவிழுந்தான் பகுதியில் அரச ஊழியருக்குக் காணி!

## குத்தகைக்கு வழங்க பிரதேச செயலகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.22

வடமராட்சி வல்லிபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஆனைவிழுந்தான் பகுதியில் அரச உத்தியோகத்தர்களுக்கு நீண்டகாலக் குத்தகையில் காணிகள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கே இப்பகுதியில் காணிகள் வழங்கப்படவுள்ளன.

இதுதொடர்பான மாதிரி விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆனைவிழுந்தான் பகுதியிலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்துக்குள் சொந்தக் காணி எதுவும் இல்லாத அரச ஊழியர்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை வடமராட்சிப் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டுமெனப் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (த-203)

# நியாப் - II திட்டத்துக்கு ஆறு கிராமங்கள் தெரிவு

கோண்டாவில்,ஓக.22

'நியாப் கட்டம்- II' இன் கீழ் கிராம அபிவிருத்தித் திட்டத்தில் முதல் கட்டமாக ஆறு கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கெருடாவில், கைதடி வடக்கு, கரம்பைக் குறிச்சி, குடமியன், வேலம்பொக்கட்டி, சங்குவேலி ஆகிய கிராமங்களே தெரிவுசெய்யப்பட்டவையாகும்.

இந்தக் கிராமங்களில் பலநோக்கு அல்லது பொதுமண்டபங்களை அமைப்பதற்கான நடவடிக்கையை அந்தந்தப் பிரதேச செயலகங்கள் 'நியாப்' கட்டம் - II இன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவிருக்கின்றன. இந்தக் கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு அரச அதிபரின் அனுமதி பெறப்பட்டுள்ளதாக 'நியாப்' திட்டத்தின் யாழ். மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (த- 49)

# குடாநாட்டுப் பொலீஸாருக்கு குண்டு துளைக்காத அங்கிகள்

குடாநாட்டில் பொலீஸார் தற்போது குண்டு துளைக்காத அங்கிகளை அணிந்தவாறு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4ஆம் திகதி இணுவில் பகுதியில் பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கொலைசெய்யப்பட்ட சம்பவத்தையடுத்தே பொலீஸார் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வகையில் குண்டு துளைக்காத அங்கிகளை அணிந்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

பொலீஸ் நிலையங்கள் தவிர்ந்த வெளிப்புறங்களில் கடமைக்குச் செல்லும்போது மேற்படி குண்டு துளைக்காத அங்கிகளை அணிந்துகொண்டு கடமைக்குச் செல்லுமாறு பொலீஸ் தலைமையகம் அறிவுறுத்தியிருக்கிறது என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை, கடந்த சிலநாள்களாக யாழ். பொலீஸ் நிலையத்தைச் சுற்றிவர பெருமளவு படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (த-7)

## உதயவாக்கு

கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகள் வெகுதூரத்தில் இல்லை.
- மகாத்மாகாந்தி-

## நாளை

ஆவணி 07
செவ்வாய்க்கிழமை
23.08.2005
திதி: சதுர்த்தி
பிற்பகல் 4.30 வரை
நட்சத்திரம்: ரேவதி
பின்னிரவு: 02.50 வரை
சங்கடஹர கணபதி விரதம்
சுபநேரம்: 10.35 - 12.05
ராகுகாலம்: 03.05 - 04.35
(யாவும் பழைய நேரப்படி)

# வவுனியாவில் காயமடைந்த பெண்புலிகள் கிளிநொச்சிக்கு!


வவுனியா,ஓக.22

வவுனியா மகளிர் அரசியல்துறைக் காரியாலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த மூன்று போராளிகளும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் பொலீஸாரின் பாதுகாப்புடன் நேற்றுக்காலை கிளிநொச்சிக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், வினோதராதலிங்கம் ஆகியோர் சம்பவ இடத்தினைச் சென்று பார்வையிட்டதுடன், போராளிகளுடனும் கலந்துரையாடிய பின்னர் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

ஓமந்தை வரை விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை மற்றும் சிவநாதன் கிஷோர் ஆகியோரும் சென்று வழியனுப்பிவைத்தார்கள்.

மேற்படி தாக்குதலினை நான்கு பேர் அடங்கிய குழுவினரே நடத்தி இருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்தனர்.(த-164)



தன்வினை தன்னைச் சுடும்!

# கலட்டி, சங்குவேலி அருள்மிகு சித்த ஞானவைரவ சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

பொன்னோடு பொருளும் குவிந்து நெல்வயல்களும் பயன்தரு மரங்களும் சூழ்ந் த இயற்கை எழில் கொஞ்சும் சங்குவேலிக் கிராமத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் கலட்டி என்னும் பதியில் பெருமரங்கள் சூழ ஒரு கிளுவை மரத்தடியில் சூலவடிவில் கோயில் கொண்ட ஞானவைரவப் பெருமானுக்கு ஒர் அழகிய ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அடியவர்களுடைய சித்தத்திலே தோன்றிய காரணத்தினால், இன்று ஆலயம் அமைக்கப்பட்டு, இந்தியாவின் மாமல்லபுரத்தில் உருவாக்கப்பட்ட அழகுத் திருமேனி கொண்ட சித்த ஞானவைரவப் பெருமா னுக்கும், பரிவார தெய்வங்களாம் விநாயகப் பெருமானுக்கும், பாலமுருகனுக்கும், சுந்தர விமானத்திற்கும் -

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆவணி மாதம் 6 ஆம் நாள் (22.08.2005) திங்கட்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் திருதியைத் திருதியும் கூடிய காலை 6.30 மணி தொடக்கம் 7.20 மணிவரையுள்ள கன்னிலக்கின சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நிகழ வைரவப் பெருமான் திருவருள் பொலிந்துள்ளது. மெய்யன்பர்கள் ஆலயம் வந்து எம்பெருமானின் திருவருள் பெறக்கடவர்.

### வைரவர் வழிபாடுக்கு சிறப்பிடம் உண்டு

சைவத்திருக்கோயில்களின் வழிபாட்டு ஒழுங்கிலே வைரவப் பெருமானுக்கு சிறப்பிடம் உண்டு. கருமங்களை ஆற்றுகின்ற பொழுது விநாயகப் பெருமானை எவ்வாறு முன்வைத்து வணங்குகின்றோமோ அதேபோன்று வைரவ சாந்தி, வைரவப் பொங்கல் ஆகியவற்றையும் மிக ஒழுங்காக நிறைவேற்றுகின்றோம். கந்தபுராணத்தில் வைரவ வழிபாட்டைப் பற்றி மிகச் சிறப்பாக கச்சியப்பர் பாடி அருளியுள்ளார். பெருமானுக்கு யாழ்.குடாநாட்டில் பல தனிக்கோயில்கள் உண்டு. இவற்றில் ஒன்றாக விளங்கு வது சங்குவேலி ஞானவைரவர் கோயிலாகும். இக் கோயில் குடமுழுக்கு விழா 22.08.2005 திங்கள் நடைபெறவிருப்பது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சிவாச்சாரியர்களின் பெருமுயற்சியாலும் இணுவில் மகாதேவக் குருக்களின் நெறிப்படுத்தலினாலும் இந்த அருள் நிகழ்ச்சி நல்லபடி நிறைவேற இருக்கிறது.

**கலாநிதி. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி, தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

### மெய்யுருக வைக்கும் வைரவரின் அற்புதங்கள்

நெல்வயலும், நிறை செல்வமும், சைவச் சான்றோரும் நிறைந்த சங்குவேலிக் கிராமத்தில் காவற்தெய்வமாக கருணைத் தெய்வமாக விளங்குவது சித்தஞான வைரவர்திருக் கோயில். இப்புனித திருக்கோயில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, பெரும் சாந்தி வைபவம் நடைபெறுவது அறிந்து மிகுந்த ஆனந்தமடைகின்றேன். புதிய விக்கிரகங்கள், கண்டா மணி, பூசைக்குரிய உபகரணங்கள் யாவும் அன்பர் திரு.விமலேந்திரன் அவர்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவந்ததை யான் அறிவேன். சிறு பராயத்தில் ஒடிவந்து நீயே தஞ்சமென்று படையல் செய்து பெற்றோருடன் வழிபட்டவர்கள் தம் குலதெய்வத்தை மறவாது திருப்பணிகள்செய்து அழகுக் கோயிலாக இன்று உருவாக்கியுள்ளார்கள். சித்த ஞானவைரவரின் அற்புதங்கள் பற்றி சங்குவேலி மக்கள் மெய்யுருகிச் சொல்வதை யான் கேட்டு இன்புறுவது இயல்பு. இத்திருக் கோயில் கும்பாபிஷேகத்தோடு நாடு அமைதிபெறப் பிரார்த்தித்து, திருப்பணியில் உழைத்த அன்பர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங் கி அமைகிறேன். **ஆறு .திருமுருகன்.**

### ஊருக்கும், மக்களுக்கும் புனிதம் சேர்க்கும் கும்பாபிஷேகம்

சங்குவேலி பதியில் எழுந்தருளி இருந்து அருள் ஆட்சி புரியும் அருள் மிகு சித்த ஞானவைரவ சுவாமிக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். காத்தல் கடவுளாகிய வைரவப் பெருமான் இந்த ஆலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு நீண்டகாலமாக எழுந்தருளியுள்ளார். கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்ற வாக்குக்கு அமைய பல ஆலயங்களைக் கொண்ட பிரதேசமாகிய சங்குவேலியில் ஞானவைரவப் பெருமானுக்கு நடைபெறும் கும்பாபிஷேகம் இவ்வூருக்கும், இங்கு வாழும் மக்களிற்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். இக் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ பிரார்த்திக்கின்றோம். இறைவன் ஆசீர் வதிப்பாராக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

### கும்பாபிஷேக குருவின் ஆசி!

நாம் இந்தப் பூவுலகிலே நல்லபடியாகப் பிறந்து வளர்ந்து வருகின்றோம் என்றால் அதற்கு காரணம் இறைவன். நம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக இறைவனுக்கு ஆலயம் அமைக்கிறோம், விழா எடுக்கிறோம். இவ் வகையில் கலட்டி சங்குவேலிப் பதியில் இற்றைக்கு, நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக தோற்றம் கொண்ட ஞானவைரவப் பெருமானுக்கு, புதிய ஆலயம் எழுப்பவேண்டும் என்ற எண்ணம் ஆலய பரிபாலகர்களுக்கு சித்தத்திலே தோன்றிய காரணத்தால் இன்று அழகுற ஆலயம் நிமிர்ந்துநின்று இன்று கும்பாபிஷேகப் பெருவிழாக் காண்கிறது. இப்புண்ணிய கைங்கரியத்தை நெறிப்படுத்திய ஆலய பரிபாலகர்கள், சிற்பக்கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், மின்வேலை, மரவேலை, கட்டடவேலை செய்த அனைத்து அடியவர்களுக்கும் சித்தஞானவைரவப் பெருமான் பேரருள் கிடைக்க ஆசி கூறி அமைகின்றேன்.

**சிவசிறி.பரமேஸ்வர ஜெயகுமாரக்குருக்கள்,**
கும்பாபிஷேக பிரதமகுரு,
மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில்.

### அருள் புரிவாய் போற்றி போற்றி!

சீர்வளரும் சங்குவேலிப் பதியில் வண்ணச்
சிங்காரக் கோயிலிலே பார்த்திபத்தின்
பேர் பெருகும் ஆவணியின் ஆளும் நாளில்
பேணுகின்ற உத்தரட்டாதி யோடு
பார் பெருகி கன்னிலக் கினம்சேர் திங்கள்
பயன் பெருகு பெருஞ்சாந்தி ஏற்ற வேதத்
தார் பெருக்சித்தஞான வைர வரேநின்
தாளிணைகள் போற்று கின்றோம் கருணை செய்குவாய்

சித்தஞான வைரவப் பெரு மானே நின்
சிறப்பான திருக்கோயில் கட்டி னோர்கள்
நித்தியமும் பணிபுரிந்த நேயத் தொண்டர்
நிறைந்த பரி பாலனத்தார், பணங் கொடுத்த
உத்தமர்கள் அடியவர்கள், பூசையாற்றும்
உளம் சிறந்த அந்தணர்கள், மக்கள் எல்லாம்
பத்திசுகம் பெருகி வளம் பெருகி வாழ
பரவுதிரு வருள்புரிவாய் போற்றி! போற்றி!

**அருட்கவி சீ.விநாசித்தம்பி.**

(P.44718)(25-18-45)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்கந்தவரோதயாவின் பழைய மாணவனும்,
எனது சக மாணவனுமாகிய

### திரு.துரைசிங்கம் ரகு



மக்கள் வங்கியின் சேவையில் படிப்படியாக உயர்ந்து புகழ் பூத்து, உதவி முகாமையாளர் பதவியிலிருந்து யாழ். பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு அடைந்தமையிட்டு பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைவதுடன், எனது மனமார்ந்த பாராட்டினையும் தெரிவித்து மென்மேலும் பல பதவிகளையும் பெற்று நீடூழிவாழ எனது நல்லாசிகள் பலபல.

**மக்கள் வங்கியின்**
**மதிப்பீட்டாளர்**
**திரு. V.S.சிவரட்ணம்.**

(சி/38343)(17-45)

## 2ஆம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி

தாயின் மடியில் பூவாக 29 - 01 - 1984



லொறிப் பாதகனின் கோடூர அழிப்பில் சருகாக 30 - 08 - 2003

### அமரர் மகாதேவா தனரூபன் (செல்வா)

(தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்)

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம்துயரம் நீ நீண்ட
தூரப் பயணம் சென்று விட்டாய் - எமை
பரிதவிக்க விட்டு விட்டு எத்தனை ஆண்டுகள்
ஆனாலும் மறப்போமா? உன்னை நீ சென்ற
பாதையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்
உன்புது வரவுக்காகக் காத்திருக்கிறோம் எம் செல்வாவே!

முகவரி:
டிப்போ பின் வீதி
கோண்டாவில்.

உன் பிரிவால் வாடும்:
**அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தங்கை.**

(39155)(26-17-45)

## ஒன்று கூடலும் பொதுக்கூட்டமும்

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்றத்தின் ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும் அடுத்த மாதம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன. (202)

## தவறிவிட்டது

20.08.2005 அன்று கைச்சங்கிலி ஒன்று ஈச்சமோட்டை வீதிக்கும் யாழ் .பல்கலைக் கழகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்-

42/7, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(39143)(17-45) **T.P.N.P.:-021 2222896**

## HOUSE FOR RENT

COMPLETELY RENOV. TED A-9 KANDY ROAD (MAMPALAM JUNCTION) ARIYALAI 15 MINUTES TO JAFFNA TOWN LARGE PROPERTY.

IDEAL FOR NGOs OR PROFESSIONAL PRIVATE TEN ANTS, AVAILABIE FROM 1St SEPT.

APPLY 604 , NAVALAR RD. ARIYALAI.

T.P.NO:- 077 9232690 (39131)(17-45)

## வீடு வாடகைக்கு

A-9 கண்டி வீதி (மாம்பழம் சந்தி), அரியாலையில் புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட 15 நிமிடத்தில் யாழ். நகரை அடையக் கூடிய பெரும் காணி வசதிகொண்ட வீடு வாடகைக்குண்டு.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். மற்றும் உயர்தர உத்தியோகத்தரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:- 604, நாவலர் வீதி, அரியாலை.
தொலைபேசி NO.077 9232690

(39130)(17-45)

## வாழ்த்துகின்றோம்

இன்று (22.08.2005)
திங்கட்கிழமை இல்லறத்தில்
இணையும் எமது உதவி ஆசிரியர்
**ம.ஸ்ரீவத்சாங்கசர்மா - மங்களேஸ்வரி**
தம்பதியைப் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

**தர்மசாஸ்த்தா குருகுல மாணவர்கள்.**

இணுவில். (39133)(17-45)

## ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 28 - 02 - 1934



அம்மனின் அடியில் 22 - 08 - 2000

அமரர்

### கார்த்திகேசு மாணிக்கவாசகர்

(ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர்- யாழ்ப்பாணம்- கிளிநொச்சி மாவட்டம்)

**மனிதருள் மாணிக்கம் எனத்திகழ்ந்த மன்னன்**
**மண்ணுக்காய் நிதம் உழைத்து மகிழ்வுற்ற அன்பன்**
**விண்ணுக்குப் போனதனால் விட்டிடுமோ**
**கண்ணுக்குள் கனக்கிறதே! நீபாசம் தந்த நேசம்!**

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

ஆஸ்திரேலியா. (39127)(17-45)

## புளியங்குளம் உபதபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

புளியங்குளம்,ஓக.22

புளியங்குளம் உபதபாலகத்திற்கு இதுவரை நிரந்தரக் கட்டடம் இல்லை. தற்போது தனியார் ஒருவருக்குச் சொந்தமான கட்டடத்தில் அது இயங்கிவருகின்றது.

உபதபாலகத்திற்கு ஒரு கட்டடம் அமைத்துத் தருமாறு வவுனியா பிராந்திய அஞ்சல் அத்தியட்சகரிடம் பல தடவை கேட்டபோதும் இதுவரை கட்டடம் அமைத்துத் தரவில்லையென உபதபாலதிபர் தெரிவித்தார்.

'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்கு முன்னரும் தனியார் கட்டடம் ஒன்றிலேயே இந்தத் தபாலகம் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (த-355)

## விசுவமடுவில் இன்று தற்காப்புப் பயிற்சி

பரந்தன், ஓக.22

விசுவமடுப் பிரதேசத்தில் அப்பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் தற்காப்புப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு விசுவமடு 10 ஆம் கட்டைச் சந்தியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் பிரதேச மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பேரவைச் செயலாளர் கேட்டுள்ளார். (த-352-202)

## இளையோர் ஆற்றலை மேம்படுத்தும் நிகழ்வு

கிளிநொச்சி, ஓக.22

இளையோர்களின் செயல்விருத்தியினை மேம்படுத்தும் நிகழ்வு கிளிநொச்சி இளையோர் திறன் விருத்தி நிறுவனத்தில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

இளையோர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்த களம் அமைத்துக் கொடுப்பதுடன், இவர்களது தனித்திறன்களை விருத்தி செய்வதற்காக ஆசிரியர்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பேச்சாற்றல், கலைத்திறன், உளநலம் என்பனவற்றை மேம்படுத்தும் பொருட்டு மாதந்தோறும் நிறைமதி நாளில் இந்நிகழ்வு நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-204)

# வைத்தியர் இல்லாத ஆஸ்பத்திரி!



வெள்ளாங்குளம்,ஓக.22

வெள்ளாங்குளம் அரசினர் வைத்திய சாலையில் நீண்டநாள்களாக வைத்தியர் இல்லாததனால் மக்கள் பெரிதும் சிரமங்களின் மத்தியில் வாழ்கின்றனர். இவ்வைத்திய சாலையை நம்பியே தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், மூண்டாம்பிட்டி, பாலியாறு, சேவாலங்கா, ஈகன் குடியிருப்பு, கணேசபுரம் போன்ற அனைத்துக் கிராமங்களிலும் உள்ள மக்கள் வாழ்கின்றனர்.

இந்தக் கிராமங்களில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் மிகவும் வறுமையிலேயே வாழ்கின்றனர். இவர்களில் ஒரு சிலர் மட்டுமே உந்துருளி வைத்துள்ளார்கள். இக்கிராமங்களில் உள்ள மக்கள் அவசர சுகவீனம் காரணமாக அடுத்துள்ள அயல்கிராமமான முழங்காவில் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது.

முழங்காவில் வைத்தியசாலைக்குச் செல்வதென்றால் அங்கு வீதிகள் அனைத்தும் சுத்த மோசம்.

நோயாளர்களை இங்கிருந்து முழங்காவிலுக்கு அழைத்துச் செல்ல ஏனைய வாகன வசதிகள்கூடக் கிடையாது. இதனால் உயிரிழப்புகள்கூட ஏற்பட்டு வருகின்றன.

இந்த நிலையைக் கருத்திற்கொண்டு தமிழீழ மருத்துவசேவையின் நடமாடும் மருத்துவப் பிரிவினர் வாராந்தம் அங்கு வந்து சிகிச்சைகளை மேற்கொண்டு மருந்துகளை வழங்குகின்றனர்.

எனவே, இந்த வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை நிரந்தரமாக நியமிப்பதற்கு உரியதரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-415)

## வயல்விழா

கிளிநொச்சி,ஓக.22

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வயல்விழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

(த-204)

## 29 மோட்டார் சைக்கிள்களின் பதிவுகள் இரத்து!

இருதடவைகள் பதிவுசெய்யப்பட்ட 29 மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அரச அதிபரால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவையின்போது பதிவுசெய்யப்பட்டவற்றில் 29 மோட்டார் சைக்கிள்கள் இரு தடவைகள் பதிவுசெய்யப்பட்டவைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

இதனால், இம்மோட்டார் சைக்கிள்களுக்கு வழங்கப்பட்ட 502 தொடர்பான இலக்கங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய உரிமையாளர் இம்மோட்டார் சைக்கிள்களுக்குரிய பழைய இலக்கங்களைப் பெறுவதற்கு உரிமை மாற்றப் படிவத்துடன் விவரமான சத்தியக்கடதாசியை இணைத்து அரச அதிபரின் பரிந்துரையுடன் உரிமை மாற்றம் செய்யமுடியும்.


எனவே, குறிப்பிட்ட 29 மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் உள்ள மோட்டார் வாகனக்கிளையுடன் தொடர்புகொண்டு உடன் உரிமை மாற்றம் செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள் - என்றுள்ளது. (த-202)

## நீர் தேங்கியுள்ளதால் சுகாதாரச் சீர்கேடு

முறிகண்டிப் பிள்ளையார் ஆலய வளாகத்திலிருந்து வாய்க்கால் வழியாகப் பாயும் நீரானது ஓடாது தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன், நுளம்பு போன்ற பல்வேறு நோய்க் காவிகள் மூலம் சுகாதாரத்திற்கு இடையூறு ஏற்பட வாய்ப்பாக இருப்பதை அவதானிக்கமுடிகிறது. இதுசம்பந்தமாக உரியவர்கள் கவனமெடுத்து சுகாதாரச் சீர்கேட்டைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (203-341)





*கடந்த 17 ஆம் திகதி இரவு கிளிநொச்சி பொதுச் சந்தையிலுள்ள 10 பலசரக்குக் கடைகள் முற்றாக எரிந்து நாசமாகின.*

*எரிந்த கடைகளையும் பொருள்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

# முல்லைத்தீவு வலய மாணவர்களின் சமூகக்கல்விப் போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு,ஓக.22

முல்லைத்தீவுக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் சமூகக் கல்விப் பொது அறிவுப் போட்டி அண்மையில் நடத்தப்பட்டது.

இப்போட்டியில் முதல் 5 இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**பிரிவு I - வகை 1**

பொ.கபிலன் (வெட்டுவாய்க்கால் அ.த.க.பா.), சி.தர்சிகன் (வெட்டுவாய்க்கால் அ.த.க.பா.), தெ.கஜீவனா (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பா.), க.ஜானுகா (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பா.), தி.தினேஸ்குமார் (வெட்டுவாய்க்கால் அ.த.க.பா.) -

**வகை 2**

பா.அனற்சந்திரிக்கா (அம்பலவன்பொக்கணை ம.வி.), கு.ஜெனிஸ்ரன் (கணேச. வித்தி.), ஆ.றொபேட் மெச்சிமஸ் (முல்லைத்தீவு ம.வி.), றொ.ஷகிலன் (செம்மலை ம.வி.), பா.புவிதா (உடுப்புக்குளம் த.வி.) -

**வகை 3**

செ.நிலானி (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), வி.சர்மிலன் (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), அ.சஜீவன் (விக்கினேஸ்வரா வித்தி.), அ.கில்மியா (இரணைப்பாலை ம.வி.), க.தேனுகா (விசுவமடு ம.வி.), ச.மகுரிகா (தண்ணீரூற்று இ.த.க.பா.) -

**வகை 4**

ஜெ.சர்மியா (வித்தியானந்தா கல்லூரி), சி.அறிவாளன் (புதுக்குடியிருப்பு ம. கல்லூரி), ப.மரிஸ்ரலா (வித்தியானந்தா கல்லூரி), க.கஜிபன் (புதுக்குடியிருப்பு ம.கல்லூரி), இ.காயத்திரி (வித்தியானந்தா கல்லூரி) -

**பிரிவு III - வகை 1**

ம.டென்சிடியூலா (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பா.), ப.டயாளினி (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பா.), க.சோபிகா (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பா.) -

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

**வகை 2**

க.நிசாந்தன் (செம்மலை ம.வி.), சி.துவாரகா (முல்லைத்தீவு ம.வி.), வ.மோகனகாந்தன் (செம்மலை ம.வி.), சி.பாலபானுஜா (அளம்பில் றோ.க.) -

**வகை 3**

வ.வினிதரன் (குமுளமுனை ம.வி.), தி.தர்மிலா (குமுளமுனை ம.வி.), அ.அன்ரன் ஜோர்ஜ் (கொக்குளாய் அ.த.க.பா.), க.கேதாரணி (கலைமகள் வித்தியாலயம்), த.கஜந்தி (விசுவமடு ம.வி.) -

**வகை 4**

சி.தட்சாயினி (புதுக்குடியிருப்பு ம. கல்லூரி), கு.பிந்துஜா (வித்தியானந்த கல்லூரி), இ.தெய்வி (வித்தியானந்த கல்லூரி), உ.ரகுபோஷன் (புதுக்குடியிருப்பு ம.கல்லூரி), த.கீதோபன் (புதுக்குடியிருப்பு ம.கல்லூரி). *(பிரிவு II, IV பின்னர் வெளியாகும்).* (த-353)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 23 ஆயிரம் குடும்பங்கள் மீள்க்குடியமர்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் வசித்துவந்தவர்களில் 23 ஆயிரத்து 210 குடும்பங்களைச் சேர்ந்த 89 ஆயிரத்து 538 அங்கத்தவர்கள் கடந்த 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் மீளக்குடியேறியுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 312 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 700 அங்கத்தவர்களும் -

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 498 அங்கத்தவர்களும் -

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 712 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 269 அங்கத்தவர்களும் மீளக்குடியமர்ந்துள்ளனர் என அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசியப் பணிக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.(த-352-204)

# முழங்காவிலைச் சேர்ந்த தம்பதியரின் இரண்டு நூல்கள் கொழும்பில் வெளியீடு!

முழங்காவில் வைத்திய அதிகாரி டாக்டர் முருகாந்தன் எழுதிய 'நீ நடந்த பாதையிலே' கவிதைத் தொகுதியும் அவரது துணைவியார் சந்திரகாந்தா முருகானந்தன் எழுதிய 'பெண் விடுதலையும் சமத்துவமும்' என்ற நூலும் அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் மணிமேகலைப் பிரசுர நூல் வெளியீட்டின்போது வெளியிட்டுவைக்கப்பட்டன.

கணவன், மனைவி இருவரின் நூல்களும் ஒரே மேடையில் வெளியிட்டு வைக்கப்பட்டது சிறப்பம்சமாகும். ச.முருகாந்தனின் நூலை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் எஸ்.திருஞானசுந்தரம் வெளியிட்டுவைக்க, டாக்டர் திருஞானசேகரம் முதல் பிரதியையும் எழுத்தாளர் வரதசுந்தரம், தரணிதரன் ஆகியோர் சிறப்புப் பிரதிகளையும் பெற்றுக் கொண்டனர்.

திருமதி சந்திரகாந்தா முருகானந்தனின் 'பெண் விடுதலையும் சமத்துவமும்' என்ற பெண்ணிய நூலை எழுத்தாளர் ஞானம் ஞானசேகன் வெளியிட்டுவைக்க, கொழும்பு லயன்ஸ் கழகத் தலைவி சந்திரா கணபதிப்பிள்ளை முதற்பிரதியையும் கொழும்பு இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சகாதேவன் சிறப்புப் பிரதியையும் பெற்றுக் கொண்டனர்.

குறுகிய காலத்தில் பெண்ணிய எழுத்தாளர் சந்திரகாந்தா முருகானந்தன் தனது எழுத்துருவாக்கங்கள் மூலம் அதிக கவனிப்பைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த-405)

# TR TEC நிறுவன அனுசரணையுடன் TECH நிறுவனம் நடத்திவரும் பின்வரும் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*இதோ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்*

**வன்னி மண்ணில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களுடன் கூடிய கற்கைநெறிகளை ஒரே கூரையின் கீழ் கற்பதற்கு வசதியாகத் தனித்தனியாக் அமைக்கப்பட்ட ஆய்வுகூடங்களுடனும் நவீன சாதனங்களுடனும், இலவசமாகவும் பயில்வதற்கு வாய்ப்பு**

- **IELTS** ஆங்கில கற்கைநெறி - 3 மாதங்கள்
  (கட்டணம் அறவிடப்படும்) (பட்டதாரியாக இருத்தல் வேண்டும்)
- **Diploma in Electronics** - 6 மாதங்கள்
  (க.பொ.த. (சா/த) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்)
- **Diploma in PC Maintenance & Net working (Hardware) - 6** மாதங்கள்
  (க.பொ.த. (சா/த) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்)
- **Diploma in Software Engineering (Visual Basic) - 9** மாதங்கள்
  (க.பொ.த. (உ/த) கணிதம் அல்லது விஞ்ஞானப் பிரிவில் பௌதிகவியல் சித்தி)

**குறிப்பு:-**

1. விண்ணப்பங்களை 28-08-2005 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ தபால் மூலமோ, மின்அஞ்சல் மூலமோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
2. குறித்த எண்ணிக்கையானோர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
3. ஒருவர் ஒரு கற்கை நெறியை மட்டுமே தொடரமுடியும்.

மின்அஞ்சல்: trtec - tech@yahoo.com
தபால் முகவரி: **நிர்வாக அலுவலர்,**
TR TEC,
A 9 **வீதி,**
**கிளிநொச்சி.**

(C/44708) (24-14-15)

# VACANCIES

## TR TEC requires lecturers for the following courses at Technology Training Centre - Kilinochchi

1. Electronics
2. PC Maintenance & Networking (Hardware Engineering)
3. Information Technology & Business Communication (English)
4. Management Law

Applicants must meet the folowing requirements;

i. Either be a graduate in the above subject areas from a recognised university or having qualification in the above subject areas from other private institutions.
ii. One year experience in teaching field.
iii. Courses will be conducted in English medium, so we will expect more English knowledeable person.

Salary will be decided according to the qualification and experience and it will be discussed at the interview.

Applicants may submit their application forms to the office directly or send through the post. Last date of the application forms accepted will be on or before 5 p.m. on 28th of August 2005.

Contact details:

Email: trtec tech@yahoo.com
Postal address: Administrator
TR TEC,
A 9 Road,
Kilinochchi.

(C/44709) (24)

# மாணவருக்கான பண்புசார் அபிவிருத்தி செயற்றிட்டம்: வடக்கு - கிழக்கு தமிழ் தேசிய பாடசாலைகள் புறக்கணிப்பு

பாடசாலை மாணவர்களின் பண்புசார் அபிவிருத்தியை மேம்படுத்தும் பொருட்டு நாட்டிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பாடசாலை மேம்பாட்டு முன்னோடி வேலைத்திட்டமொன்று அடுத்த வருடம் அமுல்படுத்தப்படவுள்ளது.

எனினும், இந்தத் திட்டத்துக்கென வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தெரிவான ஐந்து தேசியப் பாடசாலைகளும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் என்றும் -

வடக்கு- கிழக்கில் உள்ள எந்தவொரு தமிழ்மொழி மூல தேசியப் பாடசாலைகளும் இந்தத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய தெரிவுசெய்யப்படவில்லை என்றும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு மாகாணத்தில் ஒரு வலயம் என்ற அடிப்படையில் எட்டு வலயங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரீட்சார்த்தமாக இத்திட்டத்தை அமுல் செய்ய கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

பிரஸ்தாப எட்டு வலயங்களிலுள்ள சகல தேசிய பாடசாலைகள், இலவசக் கல்வியின் தந்தை கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா ஆரம்பித்து வைத்த மத்திய மகா வித்தியாலயங்கள், நவோதய பாடசாலைகள் ஆகிய மூன்று வகையான பாடசாலைகள் மட்டும் இப்புதிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வருகின்றன. இங்குபாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை முகாமைத்துவ அணி ஆகிய இரு அமைப்புகள் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் கேட்டுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் வரும் 100 நவோதயப் பாடசாலைகளில் 70 சிங்கள மொழி மூலமும், 30 தமிழ் மொழி மூலமும் அடங்குகின்றன. தமிழ் மொழிமூல 30 பாடசாலைகளில் 17 தமிழ்ப் பாடசாலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 104 தேசியப் பாட சாலைகளில் 87 சிங்கள மொழி மூல பாடசாலைகளும் 17 தமிழ் மொழிமூலப் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இவ்விதம் அபிவிருத்தி செய்யப்படவுள்ள 17 தமிழ் மூலப் பாடசாலைகளில் 10 முஸ்லிம் பாடசாலைகளும் 7 தமிழ்ப் பாடசாலைகளும் அடங்குகின்றன. (எ-84)

## வதிவிட செயற்பாட்டு பயிற்சிப் பட்டறை

வடக்கு - கிழக்கு மாகாணம் உள்ளிட்ட தமிழ் மொழிப் பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனைகளும் பாடத்துறை ஆசிரிய ஆலோசகர்களுக்கான வதிவிடச் செயற்பாட்டுப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் மீகொட ஆசிரிய வளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களிற்கும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் பாடத்துறைக்கான ஆசிரிய ஆலோசகர்களை இந்தப் பட்டறையில் கலந்துகொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள வழிகாட்டல் ஆலோசனைக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. முருகுப்பிள்ளை கேட்டுள்ளார். (எ-11-204)

## காரைநகரில் கடும் வரட்சி; நீரைப்பெற மக்கள் அலைச்சல்

காரைநகர் பிரதேசத்தில் நிலவும் கடும் வரட்சியினால் இங்குள்ள நீர்நிலைகள் அனைத்தும் வற்றி வருகின்றன. இதனால் இங்கு சகல வகையான தேவைகளுக்கும் தண்ணீரைப் பெறுவதில் சிரமம் எதிர்கொள்ளப்படுகிறது.

காரைநகர் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நீர் நிலைகள் மற்றும் கிணறுகள் முற்றாக வற்றிவிட்டன. இதனால், இப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் குளிப்பதற்கோ, சமையல் பாத்திரங்களைக் கழுவுவதற்கோ, ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கோ தண்ணீர் இன்றிப் பெரும் சிரமப்படுகின்றனர்.

தற்போது இப்பிரதேசத்திற்கு ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் குறிப்பிட்டளவு குடிதண்ணீர் மாத்திரமே வழங்கப்பட்டு வருகின்றது.

ஏனைய தேவைகளுக்குத் தண்ணீரைப் பெறுவதற்காக மக்கள் நீண்ட தூரம் அலைந்து திரிய வேண்டி ஏற்பட்டுள்ளது. அத்துடன், இங்குள்ள கால்நடைகளும் தண்ணீர் இன்றி அலைந்து திரிவதுடன் அவை இறக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (எ-73)

## இளவாலையில் ஆவணப் பரிசோதனை

இளவாலைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் தமது பிரிவில் மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள், கார், லாண்ட் மாஸ்ரர்கள் மற்றும் ட்ராக்டர்கள் ஆகியவற்றின் ஆவணங்களையும் சாரதி அனுமதிப் பத்திரத்தையும் சந்திகளில் நின்று பரிசோதித்து வருகின்றனர்.

இராணுவத்தினரும் பொலீஸாருடன் நிற்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தினமும் சண்டிலிப்பாய் சந்தி, தொட்டிலடிச் சந்தி, பண்டத்தரிப்புச் சந்தி, பெரியவிளான் சந்தி ஆகிய இடங்களில் பொலீஸார் தீவிர வாகனப் பரிசோதனையில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (எ-135)

## சட்டவிரோத மின் இணைப்புகள் கோப்பாயில் இனங்கண்டு துண்டிப்பு

கோப்பாய்,ஓக.22

கொக்குவில் பகுதியிலிருந்து கோப்பாய் வரையான பகுதிகளுக்குட்பட்ட பிரதான வீதிகள், ஒழுங்கைகள், நலன்புரி முகாம்கள் உள்ளிட்ட பகுதியில் மின்சார சபையினர் திடீரென மேற்கொண்ட பரிசோதனை காரணமாகப் பெரும் எண்ணிக்கையான சட்டவிரோத மின் இணைப்புகள் இனங்காணப்பட்டு அவை துண்டிக்கப்பட்டன.

வயர்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டதுடன், குறித்த மின்பாவனையாளர்களும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை இந்தத் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் கொக்குவில் பகுதி மின் அத்தியட்சகர் அ. அருள்நாதன் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டனர்.

கோப்பாய்ப் பகுதியில் மேற்படி குழுவினருக்குக் கோப்பாய் மத்தி கிராம அலுவலர் ஜோசப் இரட்ணராஜா உறுதுணையாகச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-72)

## வலி.கிழக்கில் இருவீதிகள் புனரமைப்பு

கோப்பாய்,ஓக.22

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட ஆவரங்கால் சந்தை வீதி, நவக்கிரி பாடசாலை வீதி ஆகியன துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை -

புத்தூர், 9ஆம் கட்டை வீதி, நீர்வேலி வடக்கு, மோதிரக்கேணி ஆகிய வீதிகளின் புனரமைப்புப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் -

அச்சுவேலி காலானை வீதி புனரமைப்புப் பணி பூர்த்தியடைந்துள்ளது என்றும் - பிரதேச சபையின் செயலாளர் க.நடராசா தெரிவித்துள்ளார். (எ-72)

## காலாவதியான பிஸ்கட் விற்பனை: உரிமையாளர் மீது வழக்கு தாக்கல்

சுன்னாகம் பட்டினப் பகுதியிலுள்ள கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றில் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனை ஒன்றின் போது கடை ஒன்றில் பெரும் எண்ணிக்கையான திகதி காலாவதியான பிஸ்கற்றுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அத்துடன், இக்கடையின் உரிமையாளர் மீது திகதி காலாவதியான பிஸ்கற்றுக்களை விற்பனைக்கு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி சுன்னாகம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி.ரதீசன், உடுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ.சிவரூபன் ஆகியோர் இந்தத் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர். (எ-135)






## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 13 ஆம் நாளான இன்று கனகாம்பரி சிவனேஸ்வரநாதனின் பாட்டு இடம்பெறும்.

அணி செய் கலைஞர்கள் வயலின் - சாந்தநாயகி சுப்பிரமணியம், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கெஞ் சிரா - பி.சியாம கிருஷ்ணா. (203)


* * *

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் மேற்குவீதி ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா 'கந்தபுராணம்' என்ற தலைப்பில் தொடர் இசைச் சொற்பொழி வாற்றி வருகிறார்.

அதில் இன்று 'முருகன் திருவிளையாடல்' என்ற தலைப்பில் உரையாற்றுவார். (203)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

திருவிழா பதின்மூன்று



### நல்லூரரான் திருவடி - 7



அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி - கிளியே!
சீரார் நல்லூரரானெடி

- யோகர் சுவாமிகள்.

### கருணை தனைப்புரிய வைப்பாய்!

அருவுருவா யிருந்தெமக்கு அருள்ஞானம் புரிகின்ற
திருவருளே தெய்வீகத் தீப்பொறியின் மணிமுத்தே
உருவத்தால் மனிதர்கள் போல்உலவுகின்ற கயவர்களின்
கருவத்தை யடக்கிக் கருணை தனைப் புரியவைப்பாய்

- மு.க.சிவானந்தம்

### நல்லைத் திருப்பதியை நாடுவோம்!

நல்லைத் திருப்பதியை நாடுவோம் - புகழ்
சொல்லிச் சொல்லி தினமும் நாம் பாடுவோம்

கோபுரம் கண்டுதலை வணங்குவோம் - கந்தன்
பாதமே கதியென்று பரவுவோம்

(நல்லை..)

வெள்ளிமயிலில் வேல்முருகன் தோன்றுவான் - அவன்
கொள்ளை கொள்ள மனதில் காட்சிதருகிறான்
மெல்லக் கால்கள் அவன்பின்னே செல்லுமே - கை
தாளமிட்டு வாயுருகி பாடுமே

(நல்லை..)

வேதநாத கீதம் என்றும் ஒலிக்குமே - மணியும்
ஓம் என்ற மந்திரத்தை கூறுமே
வேதனைகள் எது வந்த போதிலும் - உந்தன்
வேல் நெஞ்சில் வெற்றி கூறி நிற்குமே!

(நல்லை..)

- எஸ்.சிவானந்தராஜா.

### நெஞ்சே நீ பாடு!

இராகம்: ரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

நெஞ்சமே முருகனை நீ பாடு - அதனால்
நிச்சயம் கிடைப்பது பேரின்ப வீடு

(நெஞ்சமே)

அனுபல்லவி

பஞ்சமோ உனக்கென்ன கேடு - நின்
பாட்டிற்கு உண்டோ எல்லைக் கோடு

(நெஞ்சமே)

சரணம்

கருகிடும் வினையும் உதிர்சருகாக
தளிர்விடும் முருகனின் தனிப்பிரவாகம்
பெருகிடும் முருகனின் பேரின்பப் பித்து
பெறுபயன் தவிர்க்கொணாப் பேரின்ப வீடு

(நெஞ்சமே)

அறுமுகம் ஆகிமுன் தவழ்ததும் அவனே
அசுரர்தம் கிளை கெடத் தடிந்ததும் அவனே
அமரர்கள் அருஞ்சிறை அழித்ததும் அவனே
அழகொரு கும்பசுங் குழந்தையும் அவனே

(நெஞ்சமே)

சொல்லெணாத் துன்பம் தொடர்ந்து வந்தாலும்
எல்லையில் இன்பம் இதஞ்செய்தாலும்
கல்லுபோல் நெஞ்சம் கடிதிருந்தாலும்
நல்லையில் நாதனை நாம்மறவோமே!

(நெஞ்சமே)

- க.கனகராசா.

### கந்தன் கழல் பற்றிடுவோம்

நல்லை நகருக்கு வாருங்கள்
நாளும் கந்தன் புகழ் பாடுங்கள்
வல்லவனருள் சேர்ந்திட
வாழ்வு வளம் பெறும்
பொல்லா வினையகன்று
பொழுதெல்லாம் அவன் தாள்
பற்றிட நற்பேரின்பம் கிடைத்திடும்
கல்லையும் கருணையில்
கசிந்துருகச் செய்யும்
கந்தன் சிந்தையில்
காலமெல்லாம் அவன் கழல் பற்றி
போற்றிடுவோம்.

- க.நாகேஸ்வரா.

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக்கு நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர்களில் மற்றொரு பகுதி இங்கு வெளியிடப் படுகின்றது.

| | |
|---|---|
| ந/ 6128 | திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| ந/ 6143 | திரு. நல்லான் வல்லிபுரம் |
| ந/ 6151 | திரு. தில்லையம்பலம் சுப்பிரமணியம் |
| ந/ 6158 | திரு. கந்தையா முத்தையா |
| ந/ 6175 | திரு. பெரியதம்பி இரத்தினம் |
| ந/ 6184 | திரு. தம்பிப்பிள்ளை சண்முகநாதன் |
| ந/ 6188 | திரு. கந்தையா கணபதிப்பிள்ளை |
| ந/ 6190 | திரு. சபாபதி இரத்தினம் |
| ந/ 6191 | திரு. மாணிக்கம் செல்லப்பா |
| ந/ 6193 | திரு. சிவபாதம் மகேஸ்வரன் |
| ந/ 6199 | திருமதி. ராசாலட்சுமி ராசாபத்தர் |
| ந/ 6220 | திரு. நாகமணி நடராஜா |
| ந/ 6226 | திருமதி. உத்தமிப்பிள்ளை மதியாபரணம் |
| ந/ 6253 | திருமதி. சிவயோகம் முத்துராசா |
| ந/ 6254 | திரு. கதிர்காமர் சுப்பிரமணியம் |
| ந/ 6269 | திரு. சண்முகம் பொன்னம்பலம் |
| ந/ 6270 | திருமதி. மாணிக்கம் தம்பிராசா |
| ந/ 6274 | திரு. பெரியான் செல்லத்துரை |
| ந/ 6281 | திருமதி. தங்கம்மா ஐயாத்துரை |
| ந/ 6285 | திரு. சின்னத்துரை சண்முகரத்தினம் |
| ந/ 6314 | திருமதி. கனகாம்பிகை திருநாவுக்கரசு |
| ந/ 6317 | திரு. தம்பையா கணேசரத்தினம் |
| ந/ 6323 | திரு. கந்தையா சிவப்பிரகாசம் |
| ந/ 6324 | திரு. பொன்னையா செல்லத்துரை |
| ந/ 6337 | திருமதி. இராசலட்சுமி பாலையா |
| ந/ 6339 | திருமதி. நாகரத்தினம் துரைராசா |
| ந/ 6343 | திரு. வல்லிபுரம் தம்பையா |
| ந/ 6344 | திருமதி. செல்வநாயகி கனகரத்தினம் |
| ந/ 6346 | திருமதி. லில்லி அன்ரன் |
| ந/ 6352 | திருமதி. வள்ளியம்மை சீனிவாசகம் |
| ந/ 6370 | திருமதி. மகேஸ்வரி பொன்னுத்துரை |
| ந/ 6372 | திரு. நாகமுத்து ஆறுமுகம் நாகராசா |
| ந/ 6377 | திருமதி. நல்லைநாயகி கேதீஸ்வரதாசன் |
| ந/ 6379 | திருமதி. கனகாம்பிகை தர்மலிங்கம் |
| ந/ 6391 | திரு. வஸ்தியாம்பிள்ளை அன்ரனிபெனடிக்ற் |
| ந/ 6397 | திருமதி. வீரலட்சுமி செல்லத்துரை |
| ந/ 6400 | திருமதி. சரஸ்வதி தம்பித்துரை |
| ந/ 6417 | திருமதி. புஷ்பவதி இராசையா |
| ந/ 6425 | திருமதி. நாகம்மா கேசவநாதன் |
| ந/ 6429 | திரு. கதிரேசு குமரையா |
| ந/ 6432 | திரு. செல்லையா சதாசிவம் |
| ந/ 6440 | திரு. அப்புத்துரை சகாதேவன் |
| ந/ 6455 | திரு. சுப்பு மாரிமுத்து |
| ந/ 6457 | திரு. சுப்பையா ஆறுமுகம் |
| ந/ 6460 | திரு. வல்லி சின்னத்தம்பி |
| ந/ 6463 | திரு. நல்லதம்பி கிருஷ்ணசாமிமுதலி |
| ந/ 6467 | திரு. சுப்பையா நடராசா |
| ந/ 6470 | திரு. கந்தையா சோமஸ்கந்தன் |
| ந/ 6471 | திரு. பொன்னையா முத்துச்சாமி |
| ந/ 6475 | திரு. விசுவலிங்கம் விஜயகுமார் |
| ந/ 6477 | திரு. நவரத்தினம் தெட்சணாமூர்த்தி |
| ந/ 6493 | திருமதி. சிவபாக்கியம் கந்தையா |
| ந/ 6496 | திரு. இரத்தினம் பூலோகசிங்கம் |
| ந/ 6497 | திரு. சுப்பையா சண்முகம் |
| ந/ 6505 | திரு.தில்லையம்பலம் சண்முகநாதன் |
| ந/ 6513 | திரு. இராசையா ஜெயராசா |
| ந/ 6516 | திருமதி. சிவஞானவதி சிவபாதசுந்தரம் |
| ந/ 6521 | திரு. வேலுப்பிள்ளை தியாகராசா |
| ந/ 6531 | திரு. பொன்னையா வன்னியசிங்கம் |
| ந/ 6536 | திரு. சபாரட்ணம் கேதீஸ்வரநாதன் |
| ந/ 6548 | திரு. சின்னத்தம்பி இராசு |
| ந/ 6553 | திரு. சின்னப்பு செல்லையா |
| ந/ 6573 | திரு. சின்னத்தம்பி கதிரவேலு மகேந்திரராஜா |
| ந/ 6582 | திரு. கார்த்திகேசு புவனேந்திரராஜா |
| ந/ 6590 | திருமதி. நவமணி நாகலிங்கம் |
| ந/ 6594 | திருமதி. கனகம்மா சின்னப்பா |
| ந/ 6601 | திரு. குழந்தை சின்னையா |
| ந/ 6603 | திரு. கந்தையா கமலநாதன் |
| ந/ 6614 | திரு. காசிப்பிள்ளை கந்தசாமி |
| ந/ 6620 | திரு. கணபதி சின்னத்துரை |
| ந/ 6621 | திருமதி. லீலாமணி நமசிவாயம் |
| ந/ 6622 | திருமதி. ஜெயராணி தர்மராசா |
| ந/ 6623 | திருமதி. மங்கையற்கரசி மயில்வாகனம் |
| ந/ 6624 | திரு. இராசையா கதிரவேற்பிள்ளை |
| ந/ 6634 | திருமதி. மகேஸ்வரி சரவணமுத்து |
| ந/ 6648 | திருமதி. மகாதேவி கிருஷ்ணபிள்ளை |
| ந/ 6654 | திரு. செல்லத்துரை பாலச்சந்திரன் |
| ந/ 6655 | திருமதி. தையல்நாயகி செல்வராசா |
| ந/ 6659 | திருமதி. அன்னம்மா வேலுப்பிள்ளை |
| ந/ 6660 | திரு. சின்னப்பு கனகரத்தினம் |
| ந/ 6666 | திரு. கணபதிப்பிள்ளை சிவானந்தநாயகம் |
| ந/ 6667 | திருமதி. மாணிக்கம் பொன்னையா |
| ந/ 6680 | திருமதி. தங்கேஸ்வரி நாகராசா |
| ந/ 6697 | திரு. சண்முகம் தர்மலிங்கம் |
| ந/ 6699 | திரு. இளையதம்பி கந்தையா தியாகராஜா |
| ந/ 6700 | திருமதி. மகேஸ்வரி பரமசாமி |
| ந/ 6702 | திரு. தம்பு தனநாயகம் |
| ந/ 6704 | திரு. சீனி குருசாமி |
| ந/ 6713 | திருமதி. புனிதவதி பாலகிருஷ்ணன் |
| ந/ 6717 | திரு. செல்லப்பா தனபாலசிங்கம் |
| ந/ 6720 | திருமதி. நாகேஸ்வரி சோமசுந்தரம் |
| ந/ 6721 | திரு. வெள்ளையர் அம்பலம் |
| ந/ 6741 | திரு. மாரிமுத்து சேனாதிராசா |
| ந/ 6742 | திரு. ஆறுமுகம் சதாசிவம் |
| ந/ 6752 | திரு. விஸ்வலிங்கம் கனகரட்ணம் |
| ந/ 6756 | திரு. பொன்னையா கந்தையா |
| ந/ 6760 | திரு. கதிரேசு தில்லையம்பலம் |
| ந/ 6770 | திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| ந/ 6776 | திருமதி. புஷ்பம் சிவகுருநாதன் |
| ந/ 6780 | திரு. கந்தையா செல்லத்துரை |
| ந/ 6791 | திரு. பொன்னம்பலம் பாக்கியநாதன் |
| ந/ 6809 | திரு. கணபதிப்பிள்ளை சாம்பசிவம் |
| ந/ 6813 | திருமதி. இராசம்மா செல்வரத்தினம் |
| ந/ 6814 | திரு. சின்னப்பு சுப்பிரமணியம் |
| ந/ 6815 | திருமதி. துரையம்மா பொன்னையா |
| ந/ 6819 | திருமதி. இராசபுஸ்பம் சண்முகம் |
| ந/ 6834 | திரு. கனகசபை பினாகபாணி |
| ந/ 6840 | திரு. சண்முகம் இராசதுரை |
| ந/ 6841 | திருமதி. நாகரத்தினம் கனகரத்தினம் |
| ந/ 6845 | திரு. கணபதிப்பிள்ளை பாலசிங்கம் |
| ந/ 6847 | திரு. கனகரெட்ணம் குகானந்தம் |
| ந/ 6857 | திருமதி. தங்கமணி குணசிங்கம் |
| ந/ 6869 | திரு. பரமசாமிக்குருக்கள் சிவஞானசுப்பிரமணியம் |
| ந/ 6878 | திரு. சின்னத்தம்பி கனகசபை |
| ந/ 6884 | திருமதி. பரமேஸ்வரி பரமநாதன் |
| ந/ 6895 | திரு. வைத்தியலிங்கம் விசுவலிங்கம் |
| ந/ 6899 | திரு. சண்முகம் சபாநாதன் |
| ந/ 6900 | திரு. வீரகத்தி பொன்னுத்துரை |
| ந/ 6906 | திருமதி. பரமேஸ்வரி குமாரசுவாமி |
| ந/6929 | திரு. கலாநிதி வித்வான். க.நல்லதம்பி வேலன் |
| ந/ 6931 | திருமதி. மகேஸ்வரி சுப்பிரமணியம் |
| ந/ 6964 | திருமதி. கமலாம்பிகை சேதுநாதன் |
| ந/ 6968 | திருமதி. வியாகம்மா திருநாவுக்கரசு |
| ந/ 6970 | திருமதி. யோகேஸ்வரி இராமச்சந்திரன் |
| ந/ 6980 | திரு. சின்னப்பு ஆசைப்பிள்ளை |
| ந/ 6984 | திருமதி. பரமேஸ்வரி செல்வநாயகம் |
| ந/ 6986 | திரு. வை.ஆறுமுகம் கணபதிப்பிள்ளை |
| ந/ 6989 | திரு. வல்லிபுரம் செல்வராசா |
| ந/ 6990 | திரு. சிவசம்பு கனகசபாபதி |
| ந/ 6993 | திரு. செல்லப்பா கைலாசபிள்ளை |
| ந/ 6998 | திரு. தில்லையம்பலம் கணநாதன் |
| ந/ 7015 | திரு. நாகலிங்கம் சண்முகலிங்கம் |
| ந/ 7032 | திரு. முத்தையா கனகரத்தினம் |
| ந/ 7038 | திருமதி. கமலாசனி சூரசங்காரன் |
| ந/ 7047 | திரு. முருகர் சின்னத்துரை |
| ந/ 7062 | திரு. கந்தையா இராசையா |
| ந/ 7064 | திரு. சதாசிவம் கந்தையா |
| ந/ 7065 | திரு. முத்து துரைராசா |
| ந/ 7068 | திரு. சிற்றம்பலம் ஆறுமுகம் |
| ந/ 7072 | திரு. அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் அருள்பிரகாசம் |
| ந/ 7081 | திருமதி. நேசமணி இரத்தினசிங்கம் |
| ந/ 7092 | திரு. சொலமன் பென்சமின் |
| ந/ 7101 | திருமதி. பாக்கியலட்சுமி யோகராஜா |
| ந/ 7111 | திருமதி. நவமணி சின்னத்துரை |
| ந/ 7113 | திரு. பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம் |
| ந/ 7121 | திரு. செல்லப்பா நவரத்தினம் |
| ந/ 7126 | திரு. சீவகாருண்ணியம் தியாகராசா |
| ந/ 7133 | திரு. இளையதம்பி சிவலிங்கம் |
| ந/ 7142 | திரு. வல்லிபுரம் கார்த்திகேசு |
| ந/ 7143 | திரு. தம்பு கனகரத்தினம் |
| ந/ 7149 | திருமதி. இராசம்மா இராசேந்திரம் |
| ந/ 7150 | திருமதி. மகேஸ்வரி இரத்தினம் |
| ந/ 7153 | திரு. கந்தையா குணரட்ணம் |
| ந/ 7158 | திருமதி. இராசம்மா தங்கராசா |
| ந/ 7167 | திருமதி. பரஞ்சோதி குமாரசாமி |
| ந/ 7197 | திரு. வேலுப்பிள்ளை நடராசா |
| ந/ 7199 | திரு. தம்பையா பாலசிங்கம் |
| ந/ 7202 | திருமதி. பொன்னு குழந்தைவேலு |
| ந/ 7206 | திரு. அரியராஜா அன்ரனிஸ்சிறாஜ் |
| ந/ 7211 | திரு. இராசையா முத்துலிங்கம் |
| ந/ 7212 | திரு. தம்பிப்பிள்ளை இராசரத்தினம் |
| ந/ 7215 | திரு. சுப்பிரமணியம் தட்சணாமூர்த்தி |
| ந/ 7231 | திரு. தாமோதரம்பிள்ளை நடராசா |
| ந/ 7241 | திரு. சுப்பு சுந்தரம் |
| ந/ 7245 | திரு. வீரவாகு வீரராகவன் |
| ந/ 7247 | திருமதி. நாகம்மா கந்தையா |
| ந/ 7250 | திரு. சுப்பிரமணியம் காங்கேயன் |
| ந/ 7257 | திரு. இம்மானுவேல் செல்வரெட்ணம் செல்லத்தம்பி |
| ந/ 7260 | திரு. கதிரவேல் கந்தசாமி |
| ந/ 7265 | திருமதி. நாகம்மா சண்முகவடிவேல் |
| ந/ 7282 | திரு. செல்லப்பா சிவசுப்பிரமணியம் |
| ந/ 7284 | திருமதி. பூமணி கனகராஜா |
| ந/ 7285 | திரு. தம்பையா கணபதிப்பிள்ளை |
| ந/ 7290 | திரு. அப்பாக்குட்டி சிவலோகநாதன் |
| ந/ 7292 | திரு. நாகலிங்கம் விஸ்வலிங்கம் |
| ந/ 7294 | திருமதி. இரட்ணேஸ்வரி தனபாலசிங்கம் |
| ந/ 7299 | திரு. ஏரம்பு செல்வரட்ணம் |
| ந/ 7331 | திரு. கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை |
| ந/ 7340 | திரு. வேலுப்பிள்ளை சிவபாதம் |
| ந/ 7358 | திரு. கந்தையா கனகரத்தினம் |
| ந/ 7361 | திருமதி. தங்கம்மா நடராசா |
| ந/ 7362 | திருமதி. நாகம்மா கந்தையா |
| ந/ 7369 | திரு. முருகேசு வேலுப்பிள்ளை |
| ந/ 7379 | திருமதி. தவமணி நடராஜா |
| ந/ 7381 | திருமதி. யோகேஸ்வரி இராசரத்தினம் |
| ந/ 7384 | திரு. தம்பையா சண்முகலிங்கம் |
| ந/ 7387 | திரு. சின்னத்துரை கனகரெத்தினம் |
| ந/ 7389 | திருமதி. கமலாவதி சுப்பிரமணியம் |
| ந/ 7397 | திருமதி. நவமணி செல்வராஜா |
| ந/ 7402 | திருமதி. சிவபாக்கியம் இராஜேந்திரம் |
| ந/ 7403 | திருமதி. கனகவதி சுப்பிரமணியம் |
| ந/ 7409 | திரு. வல்லிபுரம் நவரத்தினம் |
| ந/ 7442 | திரு. ஆ.கனகசபை முத்துக்குமாரசுவாமி |
| ந/ 7449 | திருமதி. நல்லம்மா கந்தையா |
| ந/ 7459 | திருமதி. கனகம்மா பொன்னையா |
| ந/ 7467 | திருமதி. பாக்கியம் வைத்திலிங்கம் |
| ந/ 7477 | திரு. வேலன் மாணிக்கம் |
| ந/ 7484 | திருமதி. அன்னலட்சுமி பாக்கியராசா |
| ந/ 7488 | திரு. கதிரன் செல்லையா |
| ந/ 7495 | திருமதி.இராசலட்சுமி செல்லத்துரை |
| ந/ 7496 | திருமதி. நாகம்மா சொக்கலிங்கம் |
| ந/ 7505 | திருமதி. சகுந்தலா ஐயாத்துரை |
| ந/ 7518 | செல்வி. உமாதேவி தம்பு |
| ந/ 7519 | செல்வி. சிவசொரூபி செல்லையா |
| ந/ 7522 | திரு. தம்பையா இராசையா |
| ந/ 7524 | திருமதி. பூமணி நாகமுத்து |
| ந/ 7529 | திருமதி. நாகம்மா செல்லமுத்து |
| ந/ 7531 | திரு. சுப்பையா கனகரட்ணம் |
| ந/ 7532 | திருமதி. தவமணி பொன்னம்பலம் |
| ந/ 7534 | திருமதி. கனகம்மா கனகலிங்கம் |
| ந/ 7543 | திருமதி. அசுபதி கதிரவேலு |
| ந/ 7547 | திருமதி. ஞானம்மா இராசு |
| ந/ 7548 | திரு. சுப்பிரமணியம் பற்பநாதன் |
| ந/ 7549 | திரு. செல்லர் நாகராசா |
| ந/ 7565 | திரு. சி.தம்பிப்பிள்ளை பூபாலபிள்ளை |
| ந/ 7575 | திரு. முத்தையா தியாகராசா |
| ந/ 7603 | திருமதி. கனகம்மா சங்கரப்பிள்ளை |
| ந/ 7608 | திருமதி. திருப்பதி மாணிக்கம் |
| ந/ 7620 | திரு. பொன்னுச்சாமி குமாரசாமி |
| ந/ 7622 | திருமதி. மகேஸ்வரி துரைராஜா |
| ந/ 7631 | திருமதி. அன்னபூரணம் நடராசா |
| ந/ 7636 | திரு. கனகரத்தினம் ஸ்ரீபத்மநாதன் |
| ந/ 7638 | திரு. வெற்றிவேலு அமிர்தலிங்கம் |
| ந/ 7642 | திருமதி. யோகம்மா பரமானந்தன் |
| ந/ 7645 | திருமதி. பாக்கியம் இராசையா |
| ந/ 7649 | திருமதி. பத்மாவதி செல்லப்பா |
| ந/7652 | திருமதி. நீலாயதாட்சி கந்தசாமி |
| ந/ 7664 | திரு. அருணாசலம் நவரத்தினம் |
| ந/ 7679 | திரு. செல்லையா இராஜதுரை |
| ந/ 7686 | திரு. செல்லையா நாகலிங்கம் |
| ந/ 7712 | திரு. இராமலிங்கம் நடராசா |
| ந/ 7726 | திரு. நாகமுத்து தம்பிஐயா |
| ந/ 7731 | திரு. தம்பாபிள்ளை பஞ்சாட்சரம் |
| ந/ 7733 | திரு. கணபதிப்பிள்ளை அருளம்பலம் |
| ந/ 7741 | திருமதி. முத்துராணி துரைசிங்கம் |
| ந/ 7743 | திரு. சின்னத்தம்பி நாகராசா |
| ந/ 7761 | திரு. விஸ்வலிங்கம் நாகராசா |
| ந/ 7762 | திரு. விசுவலிங்கம் இராசதுரை |
| ந/ 7764 | திருமதி. சரஸ்வதி பழனிவேலு |
| ந/ 7770 | திரு. சின்னத்துரை இராஜதுரை |
| ந/ 7771 | திருமதி. மனோன்மணி விஸ்வரத்தினம் |
| ந/ 7773 | திருமதி. பவளம் இராமசாமி |
| ந/ 7775 | திரு. வல்லிபுரம் இராசரெத்தினம் |
| ந/ 7824 | திரு. கார்த்திகேசு குணரட்ணம் |
| ந/ 7836 | திருமதி. குகனேஸ்வரி விஜயரட்ணம் |
| ந/ 7843 | திரு. பொன்னுத்துரை சுப்பிரமணியம் |
| ந/ 7858 | திருமதி. லூயிஸ்குணமணி யோசப் |
| ந/ 7859 | திரு. சுப்பிரமணியம் நவரத்தினம் |
| ந/ 7865 | திருமதி. சரஸ்வதி ஏரம்பு |
| ந/ 7874 | திரு. ஆறுமுகம் மார்க்கண்டு |
| ந/ 7877 | திரு. முருகுப்பிள்ளை மணிவாசகம் |
| ந/ 7879 | திரு. வைரமுத்து சின்னத்துரை |
| ந/ 7885 | திருமதி. அன்னலட்சுமி செல்வரத்தினம் |
| ந/ 7889 | திருமதி. நவமணி செல்லத்துரை |
| ந/ 7891 | திருமதி. செல்லம்மா இராசரத்தினம் |
| ந/ 7892 | திரு. சுவாம்பிள்ளை சவரிமுத்து |
| ந/ 7894 | திரு. செல்லையா யோகராசா |
| ந/ 7896 | திரு. சண்முகம் தவராசா |
| ந/ 7899 | திரு. கந்தையா ஆறுமுகம் |
| ந/ 7900 | திரு. செல்லையா தர்மலிங்கம் |
| ந/ 7903 | திருமதி. பூரணம் சுப்பிரமணியம் |
| ந/ 7907 | திரு. கந்தையா பாலசிங்கம் |
| ந/ 7910 | திருமதி. சிவலட்சுமி ஐயாத்துரை |
| ந/ 7918 | திருமதி. நாகம்மா காங்கேசு |
| ந/ 7927 | திருமதி. இராஜேஸ்வரி கதிரவேலு |
| ந/ 7940 | திரு. கிறிஷ்ரி செல்வத்துரை செல்வராசா |
| ந/ 7951 | திருமதி. சின்னம்மா அரியகுட்டி |
| ந/ 7972 | திருமதி. இரத்தினம் புண்ணியமூர்த்தி |
| ந/ 7974 | திரு. நாகநாதர் அருளம்பலம் |
| ந/ 7982 | திரு. வல்லிபுரம் முருகேசு |
| ந/ 7986 | செல்வி. சரோஜினிதேவி தில்லையம்பலம் |
| ந/ 7991 | திரு. அப்புத்துரை தம்பிஐயா |
| ந/ 7999 | திரு. அப்புக்குட்டி துரைராஜா |
| ந/ 8002 | திரு. சின்னத்தம்பி துரைராசா |
| ந/ 8012 | திருமதி. மங்கையற்கரசி இராசையா |
| ந/ 8018 | திரு. முத்துக்குமாரசாமி திருநாவுக்கரசு |
| ந/ 8029 | திரு. சரவணமுத்து தியாகராசா |
| ந/ 8034 | திருமதி. மேரிமாகிறேற் தியாகராசா |
| ந/ 8036 | திரு. முத்துச்சாமி சித்திரவேலு |
| ந/ 8037 | திரு. வேலுப்பிள்ளை வீரசிங்கம் |
| ந/ 8041 | திருமதி. பார்வதி கனகரட்ணம் |
| ந/ 8078 | திருமதி. சாந்தநாயகி சோமசேகரம் |
| ந/ 8086 | திருமதி. தயாநிதி அமரசிங்கம் |
| ந/ 8101 | திரு. வேலுப்பிள்ளை நடராசா |
| ந/ 8123 | திருமதி. இராசாம்பாள் முருகேசு |
| ந/ 8129 | திரு. வல்லிபுரம் கந்தையா |
| ந/ 8139 | திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு |
| ந/ 8150 | செல்வி. சோதியம்மா சின்னத்தம்பி |
| ந/ 8152 | திருமதி. ஜெயவதி பெனடிக்ற் |
| ந/ 8155 | திருமதி. தனபாக்கியம் கனகரத்தினம் |
| ந/ 8158 | திரு. சின்னையா பெனடிக்ற் ராசேந்திரம் |
| ந/ 8159 | திரு. சின்னத்தம்பி தம்பித்துரை |
| ந/ 8160 | திரு. பொன்னையா தவமணி |
| ந/ 8187 | திருமதி. மகேஸ்வரி குமரேசு |
| ந/ 8193 | திருமதி. தேவநாயகி ஆலாலசுந்தரம் |
| ந/ 8205 | திரு. மாணிக்கம் கந்தசாமி |
| ந/ 8227 | திருமதி. மனோன்மணி கந்தையா |
| ந/ 8228 | திரு. நாகலிங்கம் கனகலிங்கம் |
| ந/ 8230 | திருமதி. மகேஸ்வரி வீரகத்தி |
| ந/ 8232 | திரு. வைரமுத்து குழந்தைவேலு |
| ந/ 8243 | திரு. இராமுப்பிள்ளை மருதலிங்கம் |
| ந/ 8259 | திரு. அம்பலவாணர் பரமகுருநாதன் |
| ந/ 8264 | திரு. கண்ணுச்சாமி பெருமாள் |
| ந/ 8268 | திரு. முருகேசு சிவானந்தன் |
| ந/ 8284 | திரு. ஆ.பசுபதி துரைசிங்கம் |
| ந/ 8289 | திரு. ஆசைப்பிள்ளை செல்வரெத்தினம் |
| ந/ 8292 | திரு. சின்னத்துரை பத்மநாதன் |
| ந/ 8306 | திரு. காத்தி வைத்திலிங்கம் |
| ந/ 8311 | திரு. சிவக்கொழுந்து திருநாவுக்கரசு |
| ந/ 8325 | திருமதி. பத்மாவதி செல்வத்துரை |
| ந/ 8329 | திரு. பொன்னையா தம்பிராசா |
| ந/ 8342 | திருமதி. வள்ளியம்மை அரியரட்ணம் |
| ந/ 8343 | திருமதி. பொன்மலர் சிவசுப்பிரமணியம் |
| ந/ 8347 | திரு. ஐயாத்துரை தம்பிராசா |
| ந/ 8353 | திருமதி. பிள்ளையம்மா சிவசாமி |

(9ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ந/ | 8364 | திருமதி. இந்திராணி நவரத்தினம் |
| ந/ | 8366 | திரு. சுப்பிரமணியம் குமாரசாமி |
| ந/ | 8370 | திரு. வீரசிங்கம் பாலராசா |
| ந/ | 8374 | திருமதி. மனோன்மணி பொன்னுச்சாமி |
| ந/ | 8375 | திருமதி. மாணிக்கம் கிட்டுணு |
| ந/ | 8386 | திருமதி. தெய்வானைப்பிள்ளை சண்முகநாதன் |
| ந/ | 8400 | திரு. இரத்தினம் நடராசா |
| ந/ | 8405 | திரு. செல்லப்பா மார்க்கண்டு |
| ந/ | 8414 | திரு. முத்தையா செல்லத்தம்பி |
| ந/ | 8417 | திருமதி. புஸ்பராணி சாந்ததேவன் |
| ந/ | 8419 | திரு. கணபதி வேலாயுதபிள்ளை |
| ந/ | 8434 | திரு. ஏகாம்பரம் தியாகராசா |
| ந/ | 8438 | திருமதி. றோசம்மா பொன்னுத்துரை |
| ந/ | 8441 | திருமதி. ஜீவமணி நவரெத்தினம் |
| ந/ | 8462 | திரு. சின்னத்துரை அமிர்தலிங்கம் |
| ந/ | 8471 | திரு. ஆறுமுகம் சிங்கராசா |
| ந/ | 8473 | திருமதி. பராசக்தி பேசன் |
| ந/ | 8475 | திருமதி. மங்களேஸ்வரி சோமசுந்தரம் |
| ந/ | 8481 | திரு. சுப்பிரமணியம் தியாகராஜா |
| ந/ | 8489 | திரு. சுப்பையாபிள்ளை றிகால் சாந்திரத்தினம் |
| ந/ | 8511 | திருமதி. தங்கம்மா தியாகராசா |
| ந/ | 8512 | திரு. பேரம்பலம் கணேசலிங்கம் |
| ந/ | 8530 | திருமதி. கனகம்மா கந்தசாமி |
| ந/ | 8536 | திரு. சின்னத்தம்பி இராசையா |
| ந/ | 8577 | திரு. கந்தசாமி செல்வகுலசிங்கம் |
| ந/ | 8596 | திருமதி. ஜெயமணி செந்தில்வேல் |
| ந/ | 8612 | திருமதி. சாரதாதேவி நல்லையா |
| ந/ | 8620 | திருமதி. சிவக்கொழுந்து இராசரத்தினம் |
| ந/ | 8630 | திருமதி. வாலாம்பிகை கதிர்காமு |
| ந/ | 8631 | திருமதி. நாகம்மா தியாகராசா |
| ந/ | 8635 | திரு. அருணாசலம் சோமசுந்தரம் |
| ந/ | 8641 | திரு. சின்னத்துரை செல்வநாயகம் |
| ந/ | 8644 | திருமதி. லஷ்மி வயித்திலிங்கம் |
| ந/ | 8647 | திருமதி. சரஸ்வதி இராசலிங்கம் |
| ந/ | 8648 | திரு. கனகசபாபதிகுருக்கள் சதாசிவஐயர் |
| ந/ | 8660 | திரு. சுப்பையா நவரத்தினம் |
| ந/ | 8669 | திருமதி. முத்துலட்சுமி மாசிலாமணி |
| ந/ | 8674 | திரு. கந்தையா நவரத்தினம் |
| ந/ | 8712 | திரு. சின்னட்டி முத்தையா |
| ந/ | 8735 | திருமதி. நாகரத்தினம் கனகசபை |
| ந/ | 8756 | திருமதி. தங்கரத்தினம் நவரத்தினம் |
| ந/ | 8757 | திரு. பழனியாண்டி முத்தையா |
| ந/ | 8761 | திருமதி. இரத்தினேஸ்வரி கனகலிங்கம் |
| ந/ | 8765 | திரு. கனகசபை கயிலாசபிள்ளை |
| ந/ | 8766 | திருமதி. தங்கம்மா பொன்னையா |
| ந/ | 8774 | திரு. நாகலிங்கம் கந்தசாமி |
| ந/ | 8775 | திரு. இராமலிங்கம் கந்தையா |
| ந/ | 8790 | திருமதி. நாகம்மா கனகரத்தினம் |
| ந/ | 8796 | செல்வி. இரஞ்சிதமலர் சின்னத்துரை |
| ந/ | 8810 | திருமதி. லஷ்சுமி இரத்தினம் |
| ந/ | 8812 | திருமதி. சிவகாமிஅம்மா சந்திரசேகரஐயர் |
| ந/ | 8824 | திருமதி. கனகமணி அப்பாத்துரை |
| ந/ | 8827 | திருமதி. அன்னபூரணம் ஆறுமுகம் |
| ந/ | 8849 | திருமதி. மனோன்மணி வல்லிபுரம் |
| ந/ | 8856 | திரு. சுப்பிரமணியம் இராசலிங்கம் |
| ந/ | 8871 | திரு. மாரிமுத்து கனகசபை |
| ந/ | 8878 | திருமதி. பரமேஸ்வரி இராசையா |
| ந/ | 8881 | திருமதி. காணிக்கைமேரி அமிர்தநாதன் |
| ந/ | 8889 | திரு. சிற்றம்பலம் இராஜலிங்கம் |
| ந/ | 8894 | திரு. சுப்பிரமணியம் குணரத்தினம் |
| ந/ | 8902 | திருமதி. நாகேஸ்வரி வீரசிங்கம் |
| ந/ | 8907 | திருமதி. குணமணி சின்னத்தம்பி |
| ந/ | 8915 | திரு. கந்தையா கதிரவேலு |
| ந/ | 8941 | திரு. அருளப்பு செபஸ்தியாம்பிள்ளை |
| ந/ | 8943 | திரு. சின்னராசா சண்முகநாதன் |
| ந/ | 8963 | திரு. ஐயன் கந்தையா |
| ந/ | 8967 | திரு. நாகன் கனகு |
| ந/ | 8972 | திரு. சின்னவன் கந்தையா |
| ந/ | 8975 | திரு. தம்பிஐயா பொன்னம்பலம் |
| ந/ | 8981 | திருமதி. மகேஸ்வரி பாலசுப்பிரமணியம் |
| ந/ | 8988 | திருமதி. இலட்சுமிப்பிள்ளை சிவஞானம் |
| ந/ | 8991 | திருமதி. விசாலாட்சி கந்தசாமி |
| ந/ | 8995 | திருமதி. டேய்சி ஆரோக்கியநாதர் |
| ந/ | 9003 | திரு. பொன்னம்பலம் சோதிவேல் |
| ந/ | 9010 | திரு. விசுவலிங்கம் இராசதுரை |
| ந/ | 9018 | திருமதி. தங்கரத்தினம் பொன்னம்பலம் |
| ந/ | 9026 | செல்வி. பரமேஸ்வரி கந்தையா |
| ந/ | 9036 | திரு. சரவணமுத்து துரைரத்தினம் |
| ந/ | 9052 | திரு. சின்னையா தம்பிராஜா |
| ந/ | 9086 | திருமதி. மங்கையற்கரசி மிருகண்டு |
| ந/ | 9096 | திருமதி. பரிமளகாந்தி கனகரட்ணம் |
| ந/ | 9097 | திருமதி. பாக்கியம் துரைராசா |
| ந/ | 9101 | திருமதி. கிறிஸ்டீன் ஆசீர்வாதம் |
| ந/ | 9118 | திருமதி. திலகவதி நடராசா |
| ந/ | 9135 | திருமதி. சேதுப்பிள்ளை பரமலிங்கம் |
| ந/ | 9137 | திருமதி. சௌந்தரநாயகி சண்முகநாதன் |
| ந/ | 9153 | திருமதி. சிவக்கொழுந்து இரத்தினசிங்கம் |
| ந/ | 9160 | திரு. பொன்னையா பத்மநாதன் |
| ந/ | 9162 | திருமதி. சரஸ்வதி ஆறுமுகம் |
| ந/ | 9171 | திரு. செல்லையா கனகரெத்தினம் |
| ந/ | 9173 | திரு. தம்பு சோமசுந்தரம் |
| ந/ | 9177 | திருமதி. நாகம்மா அம்பலவாணர் |
| ந/ | 9181 | திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை |
| ந/ | 9188 | திரு. முத்தையா கனகரத்தினம் |
| ந/ | 9196 | திரு. சொக்கலிங்கம் கனகலிங்கம் |
| ந/ | 9209 | திருமதி. மீனம்மா நடராசா |
| ந/ | 9221 | திரு. கனகசபை தம்பிஐயா |
| ந/ | 9225 | திரு. சோமசுந்தரம் சாம்பசிவம் |
| ந/ | 9236 | செல்வி. ராஜேஸ்வரி கந்தசாமி |
| ந/ | 9247 | திருமதி. நித்தியபாக்கியம் கந்தசாமி |
| ந/ | 9253 | திருமதி. பத்மாவதி அரசரட்ணம் |
| ந/ | 9296 | திருமதி. பாக்கியலட்சுமி வேலாயுதபிள்ளை |
| ந/ | 9298 | திரு. செல்லையா சிறீரங்கநாதன் |
| ந/ | 9304 | திருமதி. இராசம்மா இரத்தினம் |
| ந/ | 9307 | திருமதி. இரத்தினபூபதி தேவேந்திரம்பிள்ளை |
| ந/ | 9319 | செல்வி. தேவராணி இராசையா |
| ந/ | 9323 | திருமதி. செல்லம்மா செல்லக்கண்டு |
| ந/ | 9333 | திருமதி. அன்னரெத்தினம் இராசையா |
| ந/ | 9334 | திருமதி. நேசமணி செல்லத்துரை |
| ந/ | 9341 | திருமதி. சின்னத்தங்கம் தம்பு |
| ந/ | 9342 | திருமதி. தனலெட்சுமி வன்னியசிங்கம் |
| ந/ | 9347 | திருமதி. குணவதி பொன்னுத்துரை |
| ந/ | 9351 | திரு. சுப்பிரமணியம் நடராசா |
| ந/ | 9354 | திரு. பிரான்சிஸ்ஜேம்ஸ் சின்னராசா |
| ந/ | 9357 | திருமதி. இரத்தினாவதி சபாரத்தினம் |
| ந/ | 9359 | திருமதி. இராசமலர் சிவசுப்பிரமணியசிங்கம் |
| ந/ | 9370 | திருமதி. முத்தம்மா பொன்னம்பலம் |
| ந/ | 9378 | திருமதி. முத்தம்மா பரமு |
| ந/ | 9380 | திரு. அப்புத்துரை யோசேப் செல்வரத்தினம் |
| ந/ | 9388 | திரு. அப்புத்துரை இராசா |
| ந/ | 9401 | திரு. கந்தையா குமாரசிங்கம் |
| ந/ | 9413 | திரு. வேலுப்பிள்ளை இராசதுரை |
| ந/ | 9416 | திருமதி. மேரிஅக்னஸ் டெய்சி குமரையா |
| ந/ | 9418 | திருமதி. சின்னத்தங்கம் சின்னத்தம்பி |
| ந/ | 9429 | திரு. சின்னையா குணநேசராசா |
| ந/ | 9431 | திருமதி. பகவதி செல்லையா |
| ந/ | 9438 | திருமதி. நாகரட்ணம் துரை |
| ந/ | 9448 | திருமதி. பரமேஸ்வரி கதிரவேலு |
| ந/ | 9451 | திருமதி. அன்னலட்சுமி கிருஷ்ணபிள்ளை |
| ந/ | 9454 | திரு. வல்லிபுரம் விசுவலிங்கம் |
| ந/ | 9468 | திருமதி. தங்கேஸ்வரி பாலசிங்கம் |
| ந/ | 9472 | திருமதி. மகேஸ்வரி விசுவநாதன் |
| ந/ | 9473 | திரு. வல்லிபுரம் பரமசிவம் |
| ந/ | 9474 | திருமதி. பூமணிதேவசகாயம் மரியசந்தனம் |
| ந/ | 9479 | திருமதி. இராசம்மா பொன்னுத்துரை |
| ந/ | 9490 | திருமதி. கோமதி பரராஜசிங்கம் |
| ந/ | 9492 | திருமதி. செல்வமணி இராசரத்தினம் |
| ந/ | 9496 | திருமதி. விநாயகவிசாளாட்சி சரவணபவன் |
| ந/ | 9499 | திரு. நடராசா சத்தியகுமார் |
| ந/ | 9504 | திரு. சின்னட்டி நல்லதம்பி சண்முகம் |
| ந/ | 9509 | திரு. கனகர் சின்னத்துரை |
| ந/ | 9527 | திரு. சூசைப்பிள்ளை திருச்செல்வம் |
| ந/ | 9528 | திருமதி. பூபதிப்பிள்ளை கதிரவேலுப்பிள்ளை |
| ந/ | 9548 | திரு. செல்வத்துரை செல்வரெட்ணம் |
| ந/ | 9555 | திரு. மயில்வாகனம் மாணிக்கத்தியாகராசா |
| ந/ | 9564 | திரு. மாரிமுத்து பொன்ராசா |
| ந/ | 9567 | திரு. சீனியர் முருகேசு |
| ந/ | 9582 | திரு. விநாசித்தம்பி சீனிராஜா |
| ந/ | 9585 | திரு. சபாரத்தினஐயர் ஈஸ்வரசர்மா |
| ந/ | 9600 | திரு. செல்லப்பா திருநாவுக்கரசு |
| ந/ | 9603 | திரு. சவரிமுத்து சந்தியாப்பிள்ளை |
| ந/ | 9607 | திருமதி. தங்கம்மா செல்லையா |
| ந/ | 9618 | திருமதி. அன்னலெட்சுமி பொன்னுத்துரை |
| ந/ | 9622 | திரு. தியாகராஜா கந்தையா |
| ந/ | 9630 | திருமதி. லில்லி நீக்கிலாஸ் |
| ந/ | 9635 | திருமதி. இராசலட்சுமி சங்கநாதபிள்ளை |
| ந/ | 9673 | திரு. மாரிமுத்து அப்புத்துரை |
| ந/ | 9675 | திருமதி. கனகவதி கதிரவேற்பிள்ளை |
| ந/ | 9681 | திருமதி. தையலம்மா நடராசா |
| ந/ | 9684 | திருமதி. பகவதியம்மா சச்சிதானந்தமுதலி |
| ந/ | 9706 | திருமதி. ஞானரஞ்சிதம் செல்வராயன் |
| ந/ | 9707 | திரு. கந்தையா சோதிலிங்கம் |
| ந/ | 9712 | திருமதி. தனலெட்சுமி செல்லத்துரை |
| ந/ | 9729 | திருமதி. சின்னம்மா வேலுப்பிள்ளை |
| ந/ | 9741 | திருமதி. தையல்நாயகி ஆனந்தரத்தினம் |
| ந/ | 9742 | திரு. பொன்னையா இராசரத்தினம் |
| ந/ | 9753 | திரு. கிருஸ்ணபிள்ளை சிவலிங்கம் |
| ந/ | 9756 | திருமதி. சிவயோகம் நாகலிங்கம் |
| ந/ | 9761 | திருமதி. அருந்ததி செல்வராசா |
| ந/ | 9763 | திரு. வரப்பிரகாசம் சவரிமுத்து |
| ந/ | 9767 | திருமதி. சீதாதேவி வேலாயுதம் |
| ந/ | 9781 | திரு. தம்பிராசா நாகராசா |
| ந/ | 9787 | திருமதி. நாகடெச்சிமி வீரவாகு |
| ந/ | 9790 | திருமதி. தங்கரத்தினம் முத்துத்தம்பி |
| ந/ | 9794 | திருமதி. இரத்தினம்மா காசிப்பிள்ளை |
| ந/ | 9814 | திரு. கந்தர் ஐயாத்துரை |
| ந/ | 9818 | திருமதி. இளையபிள்ளை இரத்தினம் |
| ந/ | 9835 | திருமதி. தங்கரத்தினம் செல்லையா |
| ந/ | 9843 | திரு. செல்லப்பா துரைராசா |
| ந/ | 9850 | திருமதி. மகேஸ்வரி சுப்பிரமணியம் |
| ந/ | 9855 | திருமதி. பூமணி பொன்னுத்துரை |
| ந/ | 9886 | திருமதி. செல்லம்மா கிருஸ்ணபிள்ளை |
| ந/ | 9891 | திருமதி. இரத்தினம்மா காசிநாதன் |
| ந/ | 9896 | திருமதி. நல்லம்மா மார்க்கண்டு |
| ந/ | 9901 | திருமதி. வீரலக்சுமி ஐயாத்துரை |
| ந/ | 9907 | திருமதி. இராசம்மா சிவக்கொழுந்து |
| ந/ | 9918 | திரு. தம்பிஐயா மயில்வாகனம் |
| ந/ | 9931 | திரு. அப்பையா இரத்தினசிங்கம் |
| ந/ | 9933 | திருமதி. மகேஸ்வரி வீரகத்தி |
| ந/ | 9937 | திரு. கார்த்தி மாணிக்கம் |
| ந/ | 9952 | திரு. வீரவாகு இராசலிங்கம் இரத்தினசிங்கம் |
| ந/ | 9955 | திருமதி. செல்வம் செல்லன் |
| ந/ | 9961 | திருமதி. கனகேஸ்வரி நடேசன் |
| ந/ | 9965 | திரு. முருகேசு பொன்னுத்துரை |
| ந/ | 9975 | திருமதி. சாந்தாதேவி இராசரத்தினம் |
| ந/ | 9977 | திருமதி. பாக்கியம் விஜயரத்தினம் |
| ந/ | 9979 | திரு. முருகேசு கந்தப்பு |
| ந/ | 9980 | திருமதி. மங்கயற்கரசி கந்தையா |
| ந/ | 9983 | திரு. ஆறுமுகம் நடேசு |
| ந/ | 9994 | திருமதி. நல்லம்மா தர்மரத்தினம் |
| ந/ | 10000 | திருமதி. வள்ளியம்மை தில்லையம்பலம் |
| ந/ | 10019 | திரு. துரையப்பா சீவரத்தினம் |
| ந/ | 10045 | திரு. வேலுப்பிள்ளை தில்லைநடராசா |
| ந/ | 10058 | செல்வி. ராதா சோமசுந்தரம் |
| ந/ | 10070 | திரு. செல்லத்துரை செல்லையா |
| ந/ | 10083 | திருமதி. பரஞ்சோதி இராசு |
| ந/ | 10107 | திரு. வல்லிபுரம் நாகேந்திரம் |
| ந/ | 10110 | திரு. மயில்வாகனம் சுந்தரமூர்த்தி |
| ந/ | 10113 | திருமதி. தங்கம்மா பரமு |
| ந/ | 10120 | திருமதி. சிவானந்தநாயகி மயில்வாகனம் |
| ந/ | 10142 | திருமதி. பராசக்தி கனகசபை |
| ந/ | 10147 | திரு. செல்லையா பாலசுப்பிரமணியம் |
| ந/ | 10152 | திருமதி. பரமேஸ்வரி நாகரட்ணம் |
| ந/ | 10153 | திரு. கதிர்காமு நவரத்தினசாமி |
| ந/ | 10156 | திரு. தில்லையம்பலம் இராஜ்குமார் |
| ந/ | 10169 | திருமதி. அன்னம்மா சேவியர் |
| ந/ | 10174 | திரு. கந்தர் வல்லிபுரம் |
| ந/ | 10178 | திரு. சின்னப்பு கணபதிப்பிள்ளை |
| ந/ | 10182 | திருமதி. பூமணி கார்த்திகேசு |
| ந/ | 10191 | திரு. கந்தர் தம்பிப்பிள்ளை |
| ந/ | 10203 | திரு. அம்பலவி கந்தையா கந்தசாமி |
| ந/ | 10206 | திருமதி. செல்லம்மா நடராசா |
| ந/ | 10213 | திருமதி. தவமணிதேவி இராசேந்திரம் |
| ந/ | 10223 | திருமதி. அமிர்தநாயகி விமலதாசன் |
| ந/ | 10224 | திரு. கந்தையா அருணகிரி |
| ந/ | 10226 | திரு. ஐயன் தம்பிப்பிள்ளை |
| ந/ | 10238 | திரு. ஆறுமுகம் அரியநாயகம் |
| ந/ | 10239 | திருமதி. வேதநாயகி கனகசிங்கம் |
| ந/ | 10243 | திருமதி. பார்வதிநாயகி சோமசுந்தரம் |
| ந/ | 10254 | திருமதி. செல்லம்மா கணபதி |
| ந/ | 10259 | திரு. ஐயன் வைரமுத்து |
| ந/ | 10273 | திருமதி. செல்லமுத்து அப்பையா |
| ந/ | 10274 | திரு. பொன்னம்பலம் இராசையா |
| ந/ | 10281 | திருமதி. கனகாம்பிகை பொன்னுச்சாமி |
| ந/ | 10283 | திருமதி. மகேஸ்வரி கந்தையா |
| ந/ | 10300 | திருமதி. பாக்கியம் நல்லையா |
| ந/ | 10307 | திரு. சின்னையா குமாரசாமி |
| ந/ | 10308 | திருமதி. மகேஸ்வரி குருசாமி |
| ந/ | 10324 | திருமதி. இராசம்மா செல்லையா |
| ந/ | 10325 | திருமதி. யாழைப்பழித்தமொழியாள் சண்முகராசா |
| ந/ | 10335 | திருமதி. ஜெயசீதாலட்சுமி நல்லையா |
| ந/ | 10336 | திருமதி. யோகம்மா கனகரெத்தினம் |
| ந/ | 10339 | திருமதி. பரமேஸ்வரி வைத்திலிங்கம் |
| ந/ | 10343 | திருமதி. சரஸ்வதி இராமநாதன் |
| ந/ | 10346 | திருமதி. அன்னப்பிள்ளை இளையதம்பி |
| ந/ | 10353 | திருமதி. சிவபாக்கியம் பொன்னுத்துரை |
| ந/ | 10355 | திரு. சங்கரன் சின்னையா |
| ந/ | 10365 | திரு. அரியவன் வெள்ளைச்சாமி |
| ந/ | 10372 | திருமதி. தில்லைநாயகி சிவஞானம் |
| ந/ | 10377 | திருமதி. பரமேஸ்வரி தம்பிராசா |
| ந/ | 10379 | திரு. செல்லையா கணபதிப்பிள்ளை |
| ந/ | 10392 | திருமதி. நேசம்மா அரியபுத்திரன் |
| ந/ | 10395 | திருமதி. கனகம்மா தம்பாப்பிள்ளை |
| ந/ | 10401 | திருமதி. மனோகரி நாகராசா |
| ந/ | 10404 | திருமதி. லோகேஸ்வரி செல்லத்தம்பி |
| ந/ | 10407 | திருமதி. நாகரத்தினம் கனகசபை |
| ந/ | 10415 | திருமதி. மனோன்மணி செல்வரத்தினம் |
| ந/ | 10426 | திருமதி. தெய்வானைப்பிள்ளை ராஜரட்ணம் |
| ந/ | 10430 | திருமதி. அன்னம்மா குழந்தைவேலு |
| ந/ | 10445 | திருமதி. யோகவதி இராசரத்தினம் |
| ந/ | 10448 | திருமதி. யோகேஸ்வரி ஜெகநாதன் |
| ந/ | 10451 | திரு. கந்தையா குகதாசன் |
| ந/ | 10457 | திரு. மாணிக்கம் சின்னத்துரை |
| ந/ | 10467 | திருமதி. சின்னம்மா வில்பேட் சில்வா |
| ந/ | 10481 | திருமதி. உத்தாகோசமங்கை நாகலிங்கம் |
| ந/ | 10488 | திருமதி. நாகபூசனி பஞ்சாட்சரம் |
| ந/ | 10498 | திருமதி. ராஜலக்சுமி ஞானசேகரம் |
| ந/ | 10506 | திருமதி. அன்னம்மா சுப்பிரமணியம் |
| ந/ | 10528 | திரு. அருளம்பலம் இராசையா |
| ந/ | 10533 | திருமதி. விசாலாட்சி ஆறுமுகம் |
| ந/ | 10535 | திருமதி. வாலாம்பிகை யோகராசா |
| ந/ | 10542 | திரு. விஸ்வலிங்கம் நாகரத்தினம் |
| ந/ | 10559 | திருமதி. பொன்னம்மா செல்லப்பா |
| ந/ | 10581 | திருமதி. நீலாயதாட்சி சிவராசலிங்கம் |
| ந/ | 10584 | திரு. பொன்னம்பலம் இராசதுரை |
| ந/ | 10597 | திருமதி. அன்னலட்சுமி நடராசா |
| ந/ | 10599 | திரு. கந்தையா செல்லையா |
| ந/ | 10604 | திரு. சங்கரெட்டி சுப்பையா |
| ந/ | 10605 | திரு. பொன்னையா தியாகராசா |
| ந/ | 10620 | திருமதி. அற்புதமணி நடராசா |
| ந/ | 10623 | திரு. செல்லப்பா இராசரத்தினம் |
| ந/ | 10644 | திருமதி. கெங்காதேவி கனகநாயகம் |
| ந/ | 10650 | செல்வி. கனகம்மா சின்னத்துரை |
| ந/ | 10662 | திரு. தம்பிப்பிள்ளை கந்தசாமி |
| ந/ | 10685 | திருமதி. ஜெயலட்சுமி தாமோதரம்பிள்ளை |
| ந/ | 10701 | திருமதி. யோகம்மா பரமானந்தம் |
| ந/ | 10706 | திரு. சின்னப்பு நடராஜா |
| ந/ | 10721 | திரு. சதாசிவம் கதிரமலைப்பிள்ளை |
| ந/ | 10724 | திரு. கிருஸ்ணர் கனகநாயகம் |
| ந/ | 10748 | திருமதி. இரத்தினம் செல்லத்துரை |
| ந/ | 10751 | திரு. பொன்னையா மயில்வாகனம் |
| ந/ | 10757 | திரு. பொன்னு கனகசபை தியாகராசா |
| ந/ | 10760 | திருமதி. தனலட்சுமி செல்வராசா |
| ந/ | 10768 | திருமதி. பவளம் பொன்னுத்துரை |
| ந/ | 10775 | திருமதி. பரிமளம் சுப்பிரமணியம் |
| ந/ | 10778 | திரு. தம்பு செல்வராசா |
| ந/ | 10790 | திருமதி. மங்கையர்கரசி தில்லையம்பலம் |
| ந/ | 10823 | திரு. செல்லையா குமாரசாமி |
| ந/ | 10835 | திருமதி. இராசம்மா கார்த்திகேசு |
| ந/ | 10836 | திருமதி. நல்லநாயகி நவரத்தினம் |
| ந/ | 10837 | திருமதி. பவளக்கொடி செல்லத்துரை |
| ந/ | 10845 | திரு. விநாசி இராமலிங்கம் |
| ந/ | 10852 | திருமதி. கண்மணி கந்தையா |
| ந/ | 10856 | திரு. முத்து இராசலிங்கம் |
| ந/ | 10882 | திருமதி. பூரணம் இராஜரத்தினம் |
| ந/ | 10884 | வைத்தியக் கலாநிதி. வல்லிபுரம் செல்லத்துரை |
| ந/ | 10894 | திருமதி. ரஞ்சிதமணி அருளானந்தம் |
| ந/ | 10895 | திருமதி. பரமேஸ்வரி இராசசுந்தரம் |
| ந/ | 10902 | திருமதி. சிவக்கொழுந்து துரைராசசிங்கம் |
| ந/ | 10907 | திருமதி. பரமேஸ்வரி தியாகராசா |
| ந/ | 10910 | திரு. வைத்தி செல்லன் |
| ந/ | 10914 | திருமதி. அழகம்மா பரமசாமி |
| ந/ | 10927 | திருமதி. பூமணி தம்பையா |
| ந/ | 10936 | திரு. சரவணமுத்து புவனசுந்தரம் |
| ந/ | 10937 | திரு. யோகலிங்கம் யோகேஸ்வரன் |
| ந/ | 10938 | திருமதி. சொர்ணலக்சுமி பாலசுப்பிரமணியம் |
| ந/ | 10942 | திரு. கிருஸ்ணபூபதி மாணிக்கவாசகர் |
| ந/ | 10959 | திரு. ஐயாத்துரை அருமைநாயகம் |

(வளரும்)

## தேவை

எமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த சந்தைப்படுத்தல் விற்பனைப் பிரதிநிதி தேவை. சம்பளம் 5000.00 உடன் கொமிசனும் வழங்கப்படும்.

தொடர்பு: எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
212, கோவில் வீதி,
நல்லூர். (39140)
(கைலாசப் பிள்ளையார்கோயில் முன்பாக)

## PRESIDENT CFL



பல்புகள் இப்போது
இலகு தவணையில் கிடைக்கும்

- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNV Norway யின் Iso 9000 சான்று
- 8000 Hours Life time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி, ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும்.

தொடர்பு: Light Line,
580, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556. (38860)

# எங்களுக்கு கிடைத்த சிறந்த பரிசு...

**நான் விவேக் - (வயது 15)**

நான் படிப்பில் கெட்டிக்காரனாக இருக்க நிறைய முயற்சிக்கிறேன். அத்துடன் விளையாட்டிலும் ஆர்வமுண்டு. என் விருப்பமான விளையாட்டு நீச்சல் அத்தோடு ஓட்டப்போட்டி. எல்லோரும் என்னை திறமைசாலி என்றுதான் சொல்வார்கள். உங்களுக்கு தெரியுமா நான் என்னுடைய டியூசன் கட்டணங்களை Visa Electron card இல் பணம் எடுத்துக் கொடுப்பேன். அது மட்டுமில்லை புத்தகம் வாங்க மற்றும் என் தேவைகளுக்கான பணத்தை Visa Electron card மூலமாதான் செலுத்தினேன். என் அம்மா, அப்பா எனக்கு தேவையான பணத்தை 14+ கணக்கில் இடுவார். பாட்டி கூறினார் வாழ்க்கையில் சேமிக்க நான் நன்றாக பழகி உள்ளேன் என்று. அதென்றால் உண்மையிலும் உண்மை தான்.



**நான் மது - (வயது 14)**

எனக்கும் 14+ சேமிப்பு கணக்கு உண்டு. எங்கள் அம்மா, அப்பா எப்போதுமே எனக்கான பணத்தை எனது கணக்கில் சேமிப்பார்கள். பின்பு நானும் எனக்கு கிடைக்கும் பரிசு பணத்தினையும் சேமிக்க தொடங்கினேன். நானே வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? Visa Electron card இருப்பதினால் நான் எந்நேரமும் பணம் எடுப்பதில்லை. இதனால் என் அண்ணன் என்னை "சரியான சிக்கனக்காரி" என்று சொல்வான். ஆனால் என் பாட்டி என்னை கெட்டிக்காரி என்று புகழ்வார்.



Twin Advertising

14+, உங்கள் அன்புச் செல்வங்களுக்கான
அதி சிறந்த பரிசு

14+PLUS
TEEN SAVINGS ACCOUNT

BOC 66 සංවත්සරය ஆண்டு நிறைவு ANNIVERSARY
1939 - 2005

## காரைநகரிலும் தங்கநகை அடகுச் சேவை ஆரம்பம்

இலங்கை வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுக் காரைநகர் கிளையில் தங்கநகை அடைவு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் தா.குகனேசன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் பிரதமவிருந்தினராக இலங்கை வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினர்களாக செயற்பாட்டு முகாமையாளர் வி.அருமைநாயகம், பிரதேச முகாமையாளர் எஸ்.தேவராசா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தற்போது தங்கநகை அடைவு சேவையுடன் காரைநகர் பிரதேச விவசாயிகளின் நன்மை கருதி மிகக் குறைந்தளவு வட்டி வீதத்துடன் விவசாயக் கடன் வழங்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கைவங்கிகாரைநகர் கிளை முகாமையாளர் தா.குகனேசன் தெரிவித்தார். (எ-73)

## விவசாய நிறுவனத்தில் மேல்மாடிக் கட்டடம்

மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் பாவனைக்கெனப் புதிய மேல்மாடிக் கட்டடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தைக் கட்டுவதற்கென சுமார் ஒரு கோடி ரூபா நிதியினை அமெரிக்க மிஷன் நிறுவனம் வழங்கியிருந்தது.

தற்போது இக்கட்டடத்தில் நிறுவன அதிபர் அலுவலகம், கணனி நிலையம், கேட்போர் கூடம் என்பன இயங்கிவருகின்றன.

புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதால் இதுவரை காலமும் இந்நிறுவனத்துக்கு இருந்து வந்த கட்டட வளக்குறைபாடு நீங்கியுள்ளதாகவும் அதிக அளவிலான மாணவர்களை உள்வாங்கிப் பயிற்சிகள் வழங்க வசதியேற்பட்டுள்ளதாகவும் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-152)

## விழிப்புணர்வு கலந்துரையாடல்

அடுத்த மாதம் 8ஆம் திகதி இடம்பெற உள்ள சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று கிராமத்தவர்களுக்கு விழிப்புணர்வுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த குட்டியபுலம், கோணாவளை, சுதந்திரபுரம் ஆகிய மூன்று கிராமங்களே இந்தத் திட்டத்துக்கென தெரிவுசெய்யப்பட்டிருந்தன. குட்டியப்புலம் வித்தியாலய அதிபர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் க்ட்டாயக் கல்வி சம்பந்தமான செயற்றிட்டங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

மேற்படி மூன்று கிராமங்களையும் சேர்ந்த முந்நூறுக்கும் மேற்பட்ட பெற்றோர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வலிகாமம் கல்வி வலய கட்டாயக் கல்விக்குப் பொறுப்பான அதிகாரிகளாக சி.சிவனேசன், ந.சண்முகராசா ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (எ-152)

## மகாஜன மாணவருக்கு விசேட புலமைப்பரிசில்

ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் பத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களுக்கென விசேட புலமைப்பரிசில் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினர் அக்கல்லூரியின் ஏனைய பழைய மாணவர்களுடன் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் பத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்று அக்கல்லூரியிலேயே தொடர்ந்தும் உயர்தர வகுப்பில் கல்வி பயில முன்வந்திருக்கும் கல்லூரி மாணவர்களுக்கே இந்தப் புலமைப் பரிசில் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கல்விபயில முன்வந்துள்ள ஒவ்வொரு மாணவரினதும் கல்வித்தரத்தினை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு மாணவனுக்கும் மாதாந்தம் இரண்டாயிரம் ரூபாவும் பாடரீதியாக அதிவிசேட சித்தி பெற்றவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபாவும் வழங்குவதற்குச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (எ-152)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை - கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர்.
சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(38579)

# ஐன்ஸ்ரைனின் தனிப்பட்ட வாழ்வு சுவையும் சுவாரஸ்யமும் நிறைந்தது



ஐன்ஸ்ரைன் - எல்ஷா திருமணத்தின் பின்னர்

ஐன்ஸ்ரைன் ஆண்டு சிறப்புக்கட்டுரை 4

**2005 ஆம் ஆண்டு உலக பௌதிகவியல் ஆண்டு என்றும் ஐன்ஸ்ரைன் ஆண்டு என்றும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையும், தூய - பிரயோக - பௌதிகவியல் கூட்டுறவு அமைப்பும் இணைந்து இந்தப் பிரகடனத்தைச் செய்திருக்கின்றன.**

**'அகிலத்தின் ஆசான்' என வர்ணிக்கப்படும் விஞ்ஞானி ஐன்ஸ்ரைனின் 50 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டே இந்தப் பிரகடனம். அதனையொட்டி இந்த சிறப்புக் கட்டுரைத் தொடரைத் தருகிறார் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்.**

ஐன்ஸ்ரைனால் எவ்வாறு பௌதிகவியலில் மகத்தான கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ள முடிந்தது என்று கேட்டபோது நான்கு பௌதிகவியல் மேதைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களே எனது கொள்கைகளிற்கு அத்திபாரம் இட்டவர்கள் எனக் கூறியுள்ளார். கலிலியோ கலிலி (Galileo Galilei 1564-1642), சேர் ஐசக் நியூட்டன் (Sir Isaac Newton, 1642-1727), ஹென்றிக் லோரன்ஸ் (Hendrik Lorents, 1853-1928), ஜேம்ஸ் கிளாக் மாக்ஸ்வெல் (James Clerk Maxwell, 1831-1879) ஆகிய நான்கு விஞ்ஞானிகளின் பெயரையே அவர் குறிப்பிட்டிருந்தார்.

பீற்றர் பக்ளி (Peter Buckly) என்பவர் 'தனிப்பட்ட அல்பேர்ட் ஐன்ஸ்ரைன்' (The Private Albert Einstein) என்றொரு புத்தகத்தைஎழுதிவெளியிட்டுள்ளார். இவர் ஐன்ஸ்ரைனின் நெருக்கமான நண்பர் ஒருவரின் மகனாவார். இவர் தனது புத்தகத்தில் ஐன்ஸ்ரைன் குளியல் அறையில் பாடுவது முதல், அவர் புகைக்கும் சுக்கானில் இருந்து வரும் மணம், அவர் அணிந்த உடுப்புகள், அவரின் சாப்பாட்டுப் பழக்கவழக்கங்கள், அவர் சென்ற இடங்கள் எனப் பலதரப்பட்ட விஞ்ஞானமில்லாத விடயங்களை எழுதியுள்ளார். உதாரணமாக ஐன்ஸ்ரைன் வலதுகைப் பழக்கம் உள்ளவராம். ஐன்ஸ்ரைன் மாமிச உணவு உண்ணும் பழக்கம் உள்ளவராக இருந்தாராம். ஆனால், அவரது வாழக்கையின் இறுதியாண்டில் மாமிச உணவுகளைத் தவிர்த்து மரக்கறி உணவுகளை மட்டுமே உண்டாராம்.

## எதையாவது ஆழ்ந்து சிந்திக்கையில் உலகை மறந்துவிடும் மனிதர் அவர்

ஐன்ஸ்ரைன் பிறரைப் பற்றிக் கூறிய கருத்துக்களும் மிகவும் பிரபலமானவை. உதாரணமாக மாக்ஸ் பிளாங்கு பற்றிக் கூறும் போது 'நான் அறிந்த சிறந்த மக்களில் அவரும் ஒருவர்... ஆனால், அவரிற்கு பௌதிகவியல் விளங்கவில்லை' என்று கூறினார். மேரி கியூரி (Marie Curie ) அம்மையார் பற்றிக் கூறும்போது, 'அவ மிகவும் புத்திசாலியானவர் ஆனால், அவர் மனதை உருக்கக் கூடிய இயல்பைக் கொண்டிருந்தாலும் எவரையும் பயப்படுத்தும் அளவிற்குக் கவர்ச்சியாக இல்லை' என்று கூறினார். நெய்ல்ஸ் போர் பற்றிக் கூறுகையில், 'அவர் ஒரு சிறந்த அறிவாளி. அவரின் சிந்திக்கும் ஆற்றலில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது' எனக் கூறினார்.

நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதிகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

தனது முதலாவது மனைவி மிலீவா பற்றி ஐன்ஸ்ரைன், 'அவா ஒரு சினேகிதம் இல்லாத, ஒருவரின் மனதைப் புரிந்து நடக்காத, வாழ்க்கையிலிருந்து எதையுமே பெறவிரும்பாத ஒரு சிருஷ்டிப்பு எனக் கூறியுள்ளார்.

இதேபோல ஐன்ஸ்ரைன் பற்றிப் பிறர் கூறிய கருத்துக்களும் பிரபலமானவை. ஐன்ஸ்ரைனின் பொதுத் தொடர்பியல் கொள்கைபற்றிக் ஜே.ஜே.தொம்சன் (J.J.Thomson) என்ற விஞ்ஞானி, 'மனித சிந்தனையின் சரித்திரத்திலேயே மகத்தான அடைவு' எனக் கூறியுள்ளார்.

பௌதிக சமூகத்தில் ஐன்ஸ்ரைன் பிரபலமடையத் தொடங்கியதும், 'இந்தப் புகழ் எல்லாம் அவரின் மனித இயல்பிலும் கேடு விளைவிக்கக்கூடிய ஆதிக்கத்தைக் கொண்டு வராது என நம்புகிறேன்' என்று அவரின் முதலாவது மனைவி மிலீவா கூறினார்.

ஒருமுறை நெய்ல்ஸ் போர் (Niels Bobr), 'கடவுளுக்கு எதைச் செய்யவேண்டும் என்று சொல்லுவதை நிறுத்து' என்று ஐன்ஸ்ரைனிற்குக் கூறினார்.

ஒருமுறை ஆதர் எடிங்ரனிடம் 'ஐன்ஸ்ரைனின் தொடர்பியல் கொள்கை உலகிலேயே மூன்று பேருக்கு மட்டுமே புரியும் என்கிறார்களே, உண்மையா?' என்று கேட்டபோது அவர் ஆழமாகச் சிந்தித்துவிட்டு, 'அந்த மூன்றாவது நபர் யாரென்று நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்' என்றாராம்.

ஐன்ஸ்ரைன் குழந்தையாக இருந்தபோது நீண்டகாலமாக அவரால் பேசமுடியவில்லையாம். ஒரு கணம் அவரின் பெற்றோர்கள் அவர் ஊமையோ என்று கூடப் பயந்தார்களாம்.

ஐன்ஸ்ரைன் பாடசாலையில் படிக்கும் போது அவரின் ஆசிரியர்களுக்கு அவரைப் பிடிப்பதில்லையாம். ஐன்ஸ்ரைன் கேட்கும் கேள்விகளுக்கு அவரின் ஆசிரியர்களால் பதில் கூறமுடியாமற் போனதே இதற்கு முக்கிய காரணம் என்று கூறுகிறார்கள். ஐன்ஸ்ரைனிற்கு 16 வயதாக இருக்கும்போதே ஒருநாள் ஒளியின் வேகத்துடன் நாம் ஓடினால் ஒளி நிலையாக நிற்குமா என்று கேட்டுள்ளார். அப்போது ஆசிரியர்களால் பதில் கூறமுடியவில்லை. ஆயினும், 10 வருடங்களின் பின்னால் அக் கேள்விக்குரிய பதிலை அவரே கண்டுபிடித்து சிறப்புத் தொடர்பியல் கொள்கையை உருவாக்கினார்.

ஒருமுறை ஐன்ஸ்ரைன் தனது நண்பர் ஒருவருடன் நடந்துபோகும்போது திடீரென மழை பெய்ததாம். அவர் உடனே தனது தொப்பியைக் கழற்றி, அதைத் தனது மேற் சட்டையினுள் மறைத்தாராம். அப்போது அவரின் நண்பர் 'ஏன் அப்படிச் செய்கிறீர்கள் மழையில் நனைந்துவிடப் போகிறீர்கள்' என்றாராம். அதற்கு ஐன்ஸ்ரைன் மழையில் நனைந்தால் எனது தொப்பி பழுதாகிவிடும், ஆனால் எனது தலை மயிரிற்கு எதுவும் நடக்காது என்று கூறினாராம்.

அமெரிக்காவிலுள்ள பிறின்ஸ்டன் உயர் கல்வி நிறுவனத்தில் வேலை செய்வதற்கு ஐன்ஸ்ரைன் தான் முதலாவதாக அந்த நிறுவனத்தாலேயே அழைக்கப்பட்டவராவார். அப்போது அந்நிறுவனத்தின் நிர்வாகியிடம் ஐன்ஸ்ரைனிற்கு எவ்வளவு சம்பளமும் வழங்க அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்ததாம். ஆனால், ஐன்ஸ்ரைன் கொடுக்கவே முடியாத தொகையொன்றைச் சம்பளமாகக் கேட்டாராம். அத்தொகை ஏற்றுக்கொள்ளமுடியாத அளவிற்கு மிகமிகச் சிறியதாக இருந்ததால் அந்நிர்வாகி கூடிய சம்பளத்தை ஏற்றுக்கொள்ளும்படி ஐன்ஸ்ரைனைக் கெஞ்சிக் கேட்க வேண்டியிருந்ததாம்.

ஐன்ஸ்ரைனின் காலத்தில் வாழ்ந்த பனிஷ் ஹொப்மான் (Banesh Hottmann) என்பவர் தான் ஐன்ஸ்ரைனை முதன்முதல் சந்தித்த அனுபவத்தைப் புத்தகமொன்றில் எழுதியிருந்தார். ஐன்ஸ்ரைன் ஒரு பெரிய விஞ்ஞானி என்பதால் அவர் பயந்து பயந்துபோய் மெதுவாகக் கதவைத் தட்டியிருக்கிறார். உள்ளேயிருந்து 'வாருங்கள்' என்று குரல் வந்ததாம். அந்த 'வாருங்கள்' என்ற ஒரு சொல்லிலேயே வரவேற்பும், அதேநேரம் 'என்ன வேண்டும்'? என்ற கேள்வியும் இருந்ததாம். ஐன்ஸ்ரைன் அப்போது தனது நீண்ட சுக்கானைப் புகைத்தபடி ஏதோ கணிப்பீடுகள் செய்துகொண்டிருந்தாராம். ஹொப்மான் தனது பௌதிகப் பிரச்சினையைச் சொல்லத் தொடங்க, அவற்றைக் கரும்பலகையில் எழுதி எழுதிச் சொல்லும்படி கேட்டாராம். அப்போது தான் தன்னால் அப்பிரச்சினையை உணரமுடியும் என ஐன்ஸ்ரைன் சொன்னாராம். பின்னர் ஹொப்மான் சொல்லிக்கொண்டு போகும்போது இடைமறித்த ஐன்ஸ்ரைன் 'மெதுவாகச் சொல்லிக் கொண்டு போங்கள் என்னால் விரைவாக எதையும் விளங்கிக்கொள்ளமுடியாது' என்று கூற அவர் ஏங்கிவிட்டாராம்.

ஒருமுறை ஐன்ஸ்ரைனும் ஹொப்மானும் ஒரு விடயத்தைப் பற்றி விவாதித்தபடி பிறின்ஸ்டனின் வீதியொன்றில் நடந்துபோய்க் கொண்டிருந்தார்களாம். அன்று அங்கு ஒரு பெரிய உதைபந்தாட்டப் போட்டி நடைபெற இருந்ததாம். அதற்காக மாணவர்களின் பெற்றோரும் பழைய மாணவர்களும் அங்கு கூடியிருந்தனர். ஐன்ஸ்ரைன் வருவதைக் கண்டவுடன் அவர்களெல்லாம் உதைபந்தாட்டத்தை மறந்து ஐன்ஸ்ரைனை நோக்கி ஓடி வந்தார்களாம். ஆனால், ஐன்ஸ்ரைன் தன்னைச் சுற்றி நடப்பதை உணராமல் சாதாரணமாக விவாதித்தபடி நடந்துகொண்டே போனாராம். அதாவது, ஐன்ஸ்ரைன் ஒரு விடயத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது அவருக்கு அவரைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அவர் உணர்வதில்லையாம். அந்த அளவிற்கு அவரால் மனதை ஒருமுகப்படுததிச் சிந்திக்க முடிந்ததால்தான் இவ்வளவு பாரிய கண்டு பிடிப்புகளை மேற்கொள்ள முடிந்திருக்க வேண்டும்.



ஐன்ஸ்ரைனும் எல்ஷாவும் செவ்விந்தியர்களுடன்

ஐன்ஸ்ரைனின் இரண்டாவது மனைவி எல்ஷா இறந்தபோது அவர் மிகவும் கவலையுடன் இருந்தாராம். அவருக்கு ஆறுதல் சொல்ல ஹொப்மான் போயிருக்கிறார். இருவரும் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்கள் ஆராய்ச்சி பற்றிக் கதைக்கத் தொடங்கினார்களாம். நீண்டநேரம் விவாதித்த பின்னர் இறுதியில் ஐன்ஸ்ரைன் 'இது ஒரு சந்தோசமான நாள்' எனக் கூறினாராம். அதாவது, அவரிற்கு எல்ஷா இறந்ததே மறந்துபோய்விட்டதாம். அதுதான் அவரின் மகத்தான சக்தி. பௌதிகவியலில் ஒரு விடயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினால் அவர் தனது உலகையே மறந்துவிடுவார். எனக்கெல்லாம் எவ்வளவு தான் மனதை ஒருமுகப்படுத்திப் படிக்க முயன்றாலும் 'அண்டக் காக்கா கொண்டைக் காரி' தான் மனதில் வருகிறாள்.

ஐன்ஸ்ரைன் எப்போதும் இயற்கையில் உள்ள பொருள்களின் இயல்புகளுக்கும் பௌதிகத்திற்குமிடையேயான தொடர்புகளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு இருப்பாராம். ஒருமுறை கடற்கரை மணலில் ஹொப்மான் உடன் நடந்துபோய்க்கொண்டருந்தாராம். அப்போது கால்கள் மணலில் புதைய ஹொப்மானைப் பார்த்து 'மிகவும் காய்ந்த மண்ணிலும், முழுவதும் நீரில் அமிழ்ந்துள்ள மண்ணிலும் நடக்கும் போது கால்கள் புதைகின்றன. ஆனால், ஈரமாக இருக்கும் மண்ணில் நடந்தால் கால்கள் புதையாது. இது எப்படியென்று தெரியுமா என்று ஐன்ஸ்ரைன் கேட்டாராம். அதற்கு ஹொப்மானால் உடன் பதிலளிக்க முடியவில்லையாம். பின்னர் ஐன்ஸ்ரைன் அதை மிக அழகாக விளங்கப்படுத்தினாராம். சரி என்ன விளக்கம் கொடுத்திருப்பார்? உங்களால் விடையளிக்க முடியுமா?

ஐன்ஸ்ரைனின் வேலைகள் பெரும்பாலும் பென்சில், பேப்பரின் உதவியுடனேயே நடந்தேறின. ஏனெனில், அவை சாதாரண வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட விடயங்களாக இருந்தன. ஆனால், அவரின் கொள்கைகள் சச்சரவை ஏற்படுத்தின மாத்திரமல்லாமல், பலரைக் கோபப்படவும் வைத்தது. உண்மையிலேயே அவருக்கு நோபல் பரிசைப் பிந்தி வழங்குவதற்காக அந்தத் தேர்வுக் குழுவில் இருந்தவர்கள் ஐன்ஸ்ரைனின் தொடர்பியல் கொள்கை பற்றிக் கூறாமல், அவரின் ஒளிமின் விளைவிற்கே நோபல் பரிசு வழங்கப்படுவதாக நடித்தார்களாம்.

ஒரு முறை பிறின்ஸ்ரனில் ஐன்ஸ்ரைனின் 70ஆவது பிறந்த நாளைக் கொண்டாட நடந்த மாநாடு ஒன்றில் நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானியொருவர் ஐன்ஸ்ரைனின் கொள்கைகளின் மகிமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாராம். பேசிக்கொண்டிருக்கும் போது, மிகவும் உணர்ச்சிவசப்பட்டு பேச வார்த்தைகள் வராமல் தடுமாறி, இறுதியில் தனது கைகடிகாரத்தைத் தொட்டுக் காட்டி ''இதெல்லாம் அவரிலிருந்துதான் வந்தது'' என்று பெருமையாகக் கூறிப் பேச்சை முடித்தாராம்.

(வளரும்)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 706 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 19-8-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5631721-5643549 |

லக்கினம் கன்னி

வெற்றி இலக்கங்கள்

**05 07 11 37**

ஜக்பொட் பரிசு
ரூபா. 10,00,000/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 15,73,400/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,56,803 | 10/- | 25,68,030/- |
| 2.இலக்கங்கள் | 23,497 | 20/- | 4,69,940/- |
| 1.இல லக்கினம் | 23,274 | 30/- | 6,98,220/- |
| 2.இல லக்கினம் | 2,182 | 100/- | 2,18,200/- |
| 3.இலக்கங்கள் | 640 | 500/- | 3,20,000/- |
| 3.இல லக்கினம் | 53 | 5,000/- | 2,65,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 48,39,390/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 58,91,640/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 58,91,640/- தொடர் இல. 4690230 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 5633471-4-85 |
| குருநாகல் | 5636507-5-84 |
| நுவரெலியா | 5634698-9-65 |
| மொனராகலை | 5633304-1-49 |
| களுத்துறை | 5641645-0-72 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


உ
சிவமயம்
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தினர்

மொத்த வியாபாரிகள், வாடிக்கையாளர்கள் நன்மைகருதி சீனாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சீனா கலர் பப்பிளின்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 2985. (39147)


# வாழ்த்துகின்றோம்

இன்று (22-08-2005) திங்கட்கிழமை
இல்வாழ்க்கையில் இணையும் எங்கள் அன்புத் தம்பி
**ம.ஸ்ரீவத்சாங்கசர்மா மங்களேஸ்வரி**
*தம்பதியை*
கண்ணகா பரமேஸ்வரி அம்பாளின் திருவருள்
பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

*அன்புச் சகோதரர்களான -*
சே.சிவபாலசர்மா, சி.கோமளவல்லி,
சி.லாவண்யா, சி.கௌரிசங்கர்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
(39132)(26-14-15)

## இருவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஒக.22

போத்தல் ஒட்டினால் குத்தப்பட்டுக் காயமடைந்த இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கே.சண்முகராஜா (வயது-52), எஸ்.சண்முகராஜா (வயது- 49) ஆகியோரே போத்தல் குத்துக்கு இலக்கானவர்கள் ஆவர்.

(த-13)


# யாழ்ப்பாண நகரில் வர்த்தகத்துக்குரிய காணியும் கட்டடமும் விற்பனைக்கு

**காணி இலக்கம்: 155 மற்றும் 157 மானிப்பாய் வீதி**
**தற்போது சமுர்த்தி வங்கி இயங்கும் இடம்**
**(சிவன் கோயிலுக்கு அருகில்)**
காணி : நிலப்பரப்பு02 குளி 0.78
காட்சி அறை: 1,300 சதுர அடி (அண்ணளவாக)
இருமாடிக் கட்டடம்: 2,900 சதுர அடி (அண்ணளவாக)
2005 ஒகஸ்ட் 04 ஆம் திகதிமுதல் செப்ரெம்பர் 09 ஆம் திகதி வரை முன் அனுமதியுடன் பார்வையிட முடியும்.
விலைகோரல் விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட முகவரியில் ரூபா 200/= செலுத்திப் பெறவேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விலைகோரல் விண்ணப்பங்கள் 2005 செப்ரெம்பர் 09 ஆம் திகதி மாலை 4.30 மணி அல்லது அதற்கு முன்பதாக கீழ்க்கண்ட முகவரியில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒவ்வொரு கோரல்களுடனும் மீளளிக்கப்படத்தக்க மேலதிக வைப்புப் பணமாக ரூபா 100,000/= செலுத்தப்படல் வேண்டும்.
*மேலதிக தொடர்புகளுக்கு அழைக்கவும்.*

**LIQUIDATORS**
**Home Finance Ltd,**
**C/o SJMS ASSOCIATES,**
**Restructure & Corporate Recovery,**
**Level-4, No:2, Castle Lane,**
**Colombo-04**

விசாரணைகளுக்குத் தொடர்பு கொள்ளவும்:
**குமார் அல்லது அபயசேகர**
**தொலைபேசி இல: 011 5364293 அல்லது 011 2597183**
**தொலைநகல்: 011 5364295**


உ
கணபதி துணை

# தெல்லிப்பழை - பன்னாலை

திருவருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான

**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்**

**பார்த்திப வருஷம் (2005)**

**விஷேட உற்சவ தினங்கள்**

*23-08-2005* செவ்வாய்க்கிழமை - பகல் *10* மணி கொடியேற்றம்
*30-08-2005* செவ்வாய்க்கிழமை - பிற்பகல் 4 மணி வேட்டைத் திருவிழா
*01-09-2005* வியாழக்கிழமை - இரவு *8* மணி சப்பரம்
*02-09-2005* வெள்ளிக்கிழமை - முற்பகல் *9.30* மணி தேர்
*03-09-2005* சனிக்கிழமை - முற்பகல் *10.30* தீர்த்தம்

**குறிப்பு:** கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய தினங்களில் மாகேசுவரபூஜை (அன்னதானம்) நடைபெறும்.

பிரம்மஸ்ரீ இ.சபாரத்தினக்குருக்கள்,
பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா,
ஆதீனகர்த்தாக்கள்.

(39144)(26-14-15)


# காமா அபாக்கஸ்
# GAMA ABACUS

Gama Abacus Academy

**மனக்கணிதம் ஞாபகக்கலை குழந்தைகளே!**
**எம்முடன் இணையுங்கள் உலகை வெல்லலாம்**

**எமது பயிற்சி நிலையங்கள்**

* *Adven - Inter - Pre - School, 850 Hospital Road.*
* *IBS* , சுண்டிக்குளி.
* கொக்குவில் இந்துக் கல்லூரி.
* புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.
* வைத்தீஸ்வரா கல்லூரி.
* *Pearl Technologies (Pvt) Ltd Kasthuriyar Road, Jaffna.*
* *C.B Computer Academy Kondavil.*
* *IT - Teknoma, Kokuvil.*
* கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
* கிரு கல்வியகம் கோண்டாவில்.
* மது கல்வியகம், இருபாலை.
* மாதுரி கல்வியகம், திருநெல்வேலி.
* பொது நூலகம், இணுவில் கந்தசாமி கோவில்.
* மல்லாகம் மகாவித்தியாலயம்.
* இராமநாதன் கல்லூரி,மருதனார்மடம்.
* ஸ்ரார் கல்வியகம், சுன்னாகம்.
* *IIT .Computer,* மல்லாகம்.
* ஏழாலை சைவ சன்மார்க்கம்.
* வட இந்து மகளிர் கல்லூரி.
* சாவகச்சேரி, இந்து ஆரம்பப் பாடசாலை,
* மீசாலை வீரசிங்கம்.
* கொடிகாமம், திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.
* வளர்மதி கல்வியகம், சாவகச்சேரி.
* சிவப்பிரகாசம் தும்பளை.
* உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்.
* வல்வை மகளிர் கல்லூரி.
* அச்சுவேலி மத்திய கல்லூரி
* புத்தூர் சோமஸ்கந்தா.
* IMS நீர்வேலி.
* வள்ளுவர் கல்வியகம், உரும்பிராய்.
* உரும்பிராய் இந்துக் கல்லூரி.
* *IMS* மானிப்பாய்.
* *YMCA* , நவாலி
* வட்டு மத்திய கல்லூரி
* *Computer World,* சங்கானை.
* சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
* *Subra* சித்தங்கேணி.
* நவாலி விவேகானந்தா.

**பயிற்சி மூலம்**
※ ஞாபகசக்தி
※ மனக்கணிதம்
※ கணிதத்தில் திறமை
※ துல்லியமும் வேகமும்
※ அபாரமான கிரகித்தல்
※ நுண்ணியமான கேள்வி
※ கூர்ந்து கவனித்தல்
※ தன்னாற்றல், தன்னிறைவு

**பட்டதாரி ஆசிரியர் மூலமே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.**

பிரிவு *I* 05 - 06 வயது
பிரிவு *II* 02, 03, 04, தரம்
பிரிவு *III* 05, 06, 07,08 தரம்

**பயிற்சிக்காலம் 24 மாதங்கள் மட்டும்**
பயிற்சி நிலையம் ஆரம்பிக்க விரும்புவர்களும் / பயிற்சியில் இணைய விரும்புவர்களும் தொர்பு கொள்ளுங்கள் .
T.P: 0773276362

**உங்கள் பதிவுகளை இன்றே செய்து கொள்ளுங்கள்**

**ECBC Kids Manages College** No.850,Hospital Road, Jaffna.


மாகாணப் பிரதிப் பணிப்பாளர் சுகாதார சேவைகள் பணிமனை
யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் கழிக்கப்பட்ட பொருள்கள் விற்பனை

கீழ்க்காட்டப்படும் பொருள்கள் பகிரங்க கேள்வி அடிப்படையில் விற்கப்படவுள்ளன. உரிய கேள்விப்படிவங்களை ரூபா 100/= கேள்விப்படிக்கட்டணமாக (மீளளிக்க முடியாதது) செலுத்தி 29.08.2005 பி.ப: 3 மணி வரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் 30.08.2005 மு.ப. 10மணிக்கு முன் உரிய கேள்விப் பெட்டியில் சேர்க்கப்பட வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றையதினம் உடன் திறந்து ஆராயப்படும். சித்தி பெற்ற கேள்விக்காரர் உரிய கேள்வித் தொகையைச் செலுத்திப் பொருள்களை உடனடியாக எடுத்துச் செல்லவேண்டும். பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் கற்பகப்பிள்ளையார் ஒழுங்கையிலுள்ள கச்சேரி, நல்லூர் வீதி களஞ்சியத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடமுடியும். வேறுவிவரங்களை ஆஸ்பத்திரியிலுள்ள எமது அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| | எண்ணிக்கை (கிட்டத்தட்ட) |
|---|---|
| 1. வெற்றுப் பைகள் உரப்பைகள் | 2500 |
| மாட்டுத்தாள் | 1150 |
| 2. பாவித்த ரயர்கள் | 75 |
| பற்றரிகள் | 40 |
| 3. வெற்றுப் போத்தல்கள், கொள்கலன்கள் | 750 |
| 4. பிற கழிக்கப்பட்ட பொருள்கள் பழைய இரும்பு முதலியன | |

வைத்திய கலாநிதி **ஆ.கேதீஸ்வரன்,**
மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் யாழ்ப்பாணம்.
(சி-44706)(26-14-15)

# "...கடும் பயிற்சிகளே வெற்றியின் ரகசியம் தோல்வி கண்டு துவண்டுவிடக்கூடாது"

**கொழும்பில் நடைபெற்ற கனிஷ்ட தேசிய மெய்வன்மைப் போட்டியில் முதலிடம் பெற்று தென்கொரியாவில் நடைபெற்ற சர்வமதங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் 400, 800 மீற்றர் ஓட் டப் போட்டிகளில் முதலிடம் பெற்றுத் தங்கப்பதக்கத்தை வென்று சாதனையை நிலைநாட்டிய முல்லைத்தீவு மாவட்ட மாணவன் சகாயரட்ண ராஜா நிறைஞ்சனுடான விசேட செவ்வி.**

❖கேள்வி: நிறைஞ்சன் உங்களுக்கு விளையாட்டுத்துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

◆பதில்: எனக்குத் தெரிந்த அளவிற்கு நான் 15 வயதில் இருந்தே விளையாட்டுகளில் ஈடுபட்டு வந்தேன். ஆனால், எந்தவிதமான சாதனைகளும் கிடைக்கவில்லை. நான் விளையாட்டில் முழுமூச்சாக ஈடுபட்டதும் கிடையாது. 1986 ஆம் ஆண்டு பிறந்த நான் ஆரம்பத்தில் சக்கோட்டையில் கல்விகற்றேன். 1996 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் முல்லைத்தீவிற்கு வந்தோம். இங்கு நான் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கின்றேன்.

2003 ஆம் ஆண்டு மாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 800 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முறையே முதலாம்,மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டேன். அதே ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றினேன். அப்போதும்கூட எனக்கு விளையாட்டில் ஆர்வம் இருந்ததாகத் தெரியவில்லை.

அடுத்து 2004 ஆம் ஆண்டு மாகாண மட்டரீதியில் நடைபெற்ற 400, 800 மீற்றர் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றேன். அத்துடன், அகில இலங்கை ரீதியான போட்டியில் 400 மீற்றர் ஓட்டத் தூரத்தை 49:45 வினாடிகளில் ஓடிமுடித்து இரண்டாமிடத்தையும் 800 மீற்றர் ஓட்டத்தூரத்தை ஒரு நிமிடம் 58:55 வினாடிகளில் ஓடிமுடித்து மூன்றாம் இடத்தையும் பெற்றேன்.

அதனைத் தொடர்ந்து இந்த வருடம் கடந்த ஜூலை மாதம் வவுனியாவில் நடைபெற்ற தேசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகளில் 400 மீற்றர் ஓட்டத் தூரத்தை 49:34 வினாடிகளில் நிறைவுசெய்து முதலாம் இடத்தைப்பெற்று கொரியாவில் நடைபெறவிருந்த சர்வமதங்களுக்கிடையேயான சமாதான விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றத் தெரிவானேன்.

ஜூலை மாதம் தென்கொரியாவில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் 400 மீற்றர் ஓட்டத் தூரத்தை 48:42 வினாடிகளிலும் 800 மீற்றர் ஓட்டத் தூரத்தை ஒரு நிமிடம் 56:32 வினாடிகளிலும் ஓடிமுடித்து முதலாம் இடங்களைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றேன். அத்துடன் 4x 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத் தூரத்தை 03:26 வினாடிகளில் ஓடி முடித்தேன். இது எனக்கு மிகவும் வெற்றியையும் பெருமையையும் தேடித்தந்துள்ளது.

❖கேள்வி: ஆரம்பத்தில் விளையாட்டிலேயே ஆர்வம் இல்லாத நீங்கள் எவ்வாறு இப்படிச் சாதனைகளைக் குவித்தீர்கள்?

◆பதில்: உண்மைதான்; என்னாலேயே நம்ப முடியவில்லை. இதற்கெல்லாம் முதற்காரணம் எனது பயிற்றுவிப்பாளர்கள்தான். அவர்கள் எனக்குத் தந்த நம்பிக்கையும் ஊக்கமும்தான் என்னை இந்தளவிற்கு முன்னேற்றமடையச் செய்துள்ளது.

எனது பாடசாலை பயிற்றுவிப்பாளர் என். முகுந்தன், 'சுப்ப பிராங்' விளையாட்டுக் கழகத் தலைவர் இ.இருதயரதன் (ஜான்) ஆகியோரே எனது பயிற்றுவிப்பாளர்கள்.

**விளையாட்டு வீரன் நிறைஞ்சன் செவ்வி**

நான் ஒரு விளையாட்டு வீரன் என்று இனங் காணப்படுவதற்கு முன்னர் இருந்தே எனது பயிற்றுவிப்பாளர்கள் எனக்கு உதவியாக இருந்தார்கள். அத்துடன் எனது பெற்றோரும் நான் வாழும் சமூகமும் எனக்குப் பெரும் ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் வழங்குகிறார்கள். இதுவும் எனக்குக் கிடைத்த ஒரு பெருவெற்றிதான்.

அத்துடன், தற்போது நிலவும் சமாதான சூழலும் எனது சாதனைக்கு ஒரு உறுதுணையாக இருக்கிறது. கடந்த காலங்களில் நிலவிய சமாதானமின்மை எமது வீரர்களை வெளியே சென்று விளையாட முடியாத அளவிற்கு முடக்கிவிட்டிருந்தது. ஆனால், தற்போது அந்தச் சூழல் இல்லாமையால் நாம் அதனைப் பயன்படுத்தி வெற்றிகளைப் படைக்கவேண்டும்.

கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்திற்கு வெளியே எவரும் சென்று போட்டியிடுவதில்லை. ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. வெளியே நடக்கின்ற போட்டிகளில் பயப்படாமல் பங்குபற்றக்கூடிய சூழல் தற்போது காணப்படுகின்றது.

❖கேள்வி: உங்கள் விளையாட்டு, படிப்பிற்கு இடைஞ்சலாக இருக்கவில்லையா?

◆பதில்: ஒருபோதும் இல்லை. 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தேசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிவிட்டு வந்துதான் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதினேன். அதில் எனக்கு 6ஏ, 3பி, சி என்ற பெறுபேறு கிடைத்தது. இது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. தொடர்ந்து நான் உயர் தரத்தில் கணிதப் பிரிவில் கற்று கடந்த ஏப்ரல் மாதம் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றேன்.

❖கேள்வி: விளையாட்டுத்துறையில் உள்ளவர்கள் வெற்றியடைவதற்கு நீங்கள் என்ன அறிவுரைகள் கூற விரும்புகிறீர்கள்?

◆பதில்: எம்மைவிடத் திறமையானவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்பது உண்மையிலும் உண்மை.

நாம் வெற்றியடைவதற்கு முதலில் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்யவேண்டும். பயிற்சிகளை எமது நாளாந்த கடமைகளில் ஒன்றாக நினைத்துத் தினமும் செய்யவேண்டும்.

பயிற்சிகள்தான் முன்னேற்றத்திற்கு வழிசமைக்கும். ஆரம்பத்தில் தோல்விகள் வந்தாலும் அதனைக் கண்டு சோர்ந்துவிடக்கூடாது. தோல்விகள்தான் வெற்றிக்கு முதற்படி. அதனை மறக்கவேகூடாது.

எனது தோல்வியை ஒரு பொருட்டாக நினைக்காது நாம் சவால்களை எதிர்கொள்ளப் பழகவேண்டும்.


❖கேள்வி: தென்கொரியா வெற்றி பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்....?

◆பதில்: தென்கொரியாவில் கிடைத்த வெற்றி ஒரு பெரும் அடிக்கல். அதனை வைத்துக்கொண்டு இன்னும் பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும். சிறந்த தனியான ஓர் இடத்தைப் பெறவேண்டும் என நான் விரும்புகிறேன். வடக்கு - கிழக்கில் ஒரு சிறந்த சாதனையாளராக வரவேண்டும் என்பதே எனது நோக்கமும் ஆசையும்.

❖கேள்வி: போட்டியாளர்கள் வெற்றியடைய என்ன செய்யவேண்டும் என நினைக்கிறீர்கள்?

◆பதில்: வீரர்கள் தமக்குத்தாமே கட்டுப்பாட்டை ஏற்படுத்தி அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். இதனைவிட முயற்சி தேவை. இது குறைவடையக்கூடாது. முயற்சியிருந்தால் வெற்றியடையமுடியும்.

போட்டிகளில் பங்குபற்றச் செல்பவர்கள் தாம் பயிற்சிகளை எடுப்பதற்குச் சாதனங்கள் எதுவும் இல்லை என்று வீணாக அலட்டிக்கொள்கிறார்கள். சாதனங்கள் எல்லாம் சரியாக வந்த பின்னர்தான் பயிற்சிகள் செய்வோம் என்று இருந்து விடுகிறார்கள்.



ஆனால், அப்படியிருக்காது இருக்கும் உபகரணங்களைக் கொண்டு பயிற்சிகளைச் செய்ய வேண்டும். ஒருவீரனுக்குஎவராவது ஆரம்பத்திலிருந்தே உதவி செய்வார்களேயானால் அந்த வீரன் நிச்சயமாக ஒரு நல்லநிலையை அடைவான்.

இவ்வாறு உதவியையும் ஒத்துழைப்பையும் செய்தால் எத்தனையோ வீரர்களை உருவாக்க முடியும்.

செவ்வி: கங்கா
படம்: தமிழினியன்

நிறையப் பேர் தொழில்வாய்ப்பிற்காக விளையாட்டைவிட்டு விலகிவிடுகின்றனர். எனவே, எமது வீரர்கள் என்னதான் ஆனாலும் விளையாட்டில் தொடர்ந்தும் நின்று நிலைத்து சாதனைகள் படைக்கவேண்டும். அத்துடன், எங்களிடம் எமது மண்ணில் உள்ள திறமையானவர்களை இனங்கண்டு அவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களையும் சாதனையாளர்களாக்க எமது சமூகமும் பாடசாலைச் சமூகமும் விளையாட்டுக் கழகங்களும் முன்வரவேண்டும். ✱

---

# இந்த வார இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ். | | |
| சந். | இராசிச் சக்கரம் | | புதன் சனி |
| | | | சூரி. ▲ |
| | | | வெள். வியா. கேது |

## 21.08.2005 - 27.08.2005

### மேடம்
மனம் தடுமாற்றமடையும். எதிர்பாலாரினால் செலவுகள் அதிகரிக்கும் திட்டங்கள் தயாரித்து சகோதரத்தையோ, பிள்ளைகளையோ காப்பாற்றுவீர்கள். உடல்நிலை பாதிப்பு ஏற்படும். பொருள்வரவு கொடுக்கும். தூரத்து உறவினர் வருவர். அரச தண்டனை வரஇடமுண்டு. நாரிப்பிடிப்பு உண்டு. வியாபாரிகள் நன்மை அடைவர்.
*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### இடபம்
குடும்பத்துடன் கருத்து வேற்றுப்படும் நிலைவரும் - இடமாற்றம் சிலருக்கு வரலாம். உஷ்ணத்தால் உடல் நிலைச் சோர்வுவரும். தொழிலஸ்தானத்தில் நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். இந்த இராசிக்காரராக வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்கள், பிடிபாடுகள் வர இடமுண்டு. சங்கீதச் செலவுகள் அதிகரிக்கும். ஆசிரியர்கள் நன்மை அடைவர்.
*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வெள்ளி.*

### மிதுனம்
பொருள்வரவு அதிகரிக்கும். வெளிநாட்டு உதவிகள் கிடைக்க இடமுண்டு. அயலவர்களுடன் நிதானமாக இருக்கவும். தானதர்மங்கள் செய்வீர்கள். பொதுத்தொண்டுகளால் உதவிகள் கிடைக்கும். இடமாற்றம் பிரயாணம் சகஜம் வியாபாரிகள் நன்மை அடைவர்.
*அதிர்ஷ்டநாள்: வெள்ளி*

### கடகம்
கலக்கம் என்ன? ஏன் அடிக்கடி நண்பர்களால் பதற்றப் படுகின்றீர்கள். உறவினருடன் கருத்து வேற்றுமைப்படுவீர்கள். கொடுத்த பொருள் வராததால் கருத்துவேற்றுமை வரும். தொழிலில் நஷ்டம் வரும். நாரி உளைவு கொடுக்கும். அரசியல்வாதிகள், குருமார்கள் நன்மை அடைவார்கள்.
*அதிர்ஷ்டநாள்: வெள்ளி*

### சிங்கம்
எதையும் மறைத்து வைக்க முடியாத நிலை தோன்றும். அடிக்கடி மனப்பதற்றம் ஏற்படும். தலை சம்பந்தமான நோய் ஒன்று இருக்கும். பெரியவர்களின் கருணை கிடைக்கும். தாய்வழி உறவினருக்கு உதவிகள் செய்வீகள். கண் வருத்தம், பித்தக் கொதிப்பு கொடுக்கும். நிர்வாகம், பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.
*அதிர்ஷ்டநாள்: வெள்ளி*

### கன்னி
காத்திருந்த பல விடயங்கள் கருத்தில் கொள்வீர்கள். பொருளில் நிதானமாக இருங்கள். அல்லது களவு போகலாம். பெற்றோர் வழியினர் கிட்டிய உறவினர் ஒருவருக்கு உடல்நிலை பாதிப்பு வரலாம். வயிற்றுவருத்தம், உஷ்ணபீடைகள் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு நன்மை ஏற்படும்.
*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வெள்ளி.*

### துலாம்
காசுதேட நாடுபோனால் பரவாயில்லை. வீடுவிட்டுச் சென்று அலைந்தால் காசு போகும் அல்லவா?. தேடிவரும் சந்தர்ப்பங்கள் விலகிவிடும். புத்திரருக்கு மாற்றங்கள் கொடுக்கும். புதிய திட்டங்கள் பிசுபிசுக்கும். தொழில்ஸ்தானத்தில் சஞ்சலங்கள் ஏற்படும். எதிர்பாலார்கள் உதவுவார்கள். பாதுகாப்பு, சட்டத் துறையினர் நன்மை அடைவார்கள்.
*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வெள்ளி.*

### விருச்சிகம்
வீட்டிற்கு வீடு வாசல் படிதான். செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்டது நடக்கும். பணம்சேரும் நண்பர்கள் உதவுவர்கள் அரச உதவிகள் கிடைக்கும். புதிய நண்பர்கள் உதவி தருவர். உஷ்ணபீடைகள் காய்ச்சல் கொடுக்கலாம். வியாபாரிகளுக்கு நன்மை அதிகரிக்கும். இடமாற்றங்களை நிதானமாகச் செய்யவும்.
*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### தனுசு
புதிய திட்டம் வெற்றி பெறும். சிலர் உங்களை கேவலமாகப் பேசுவர். அடிக்கடி புதிய பொறுப்புக்களால் புகழ் வரும். பிரயாணத்தில் சிலருக்கு காயங்கள் வரலாம். வாகனசுகம் கொடுக்கும். கால்உளைவு வயிற்றுத் தொல்லைகள் கொடுக்கும். மின்சாரம், நெருப்பால் சிலருக்கு கெடுதி வரலாம். நிதானமாக இருக்கவும்.
*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### மகரம்
சனிபார்வை நல்லதல்ல. காரியக் கெடுதிகள் ஏற்படும். எதிர்பாலாருக்கு நல்லதல்ல உஷ்ண பீடைகள் வருத்தும். தலை வருத்தம் வரும். வீண் பகை ஏற்படும். இடமாற்றங்கள் சிலரைத் திசை திருப்பும் சந்தர்ப்பம் வரும். உறவினருக்கு நல்லதல்ல. தந்தை வழியினர் அன்னிய இடங்களிலிருந்து உதவுவர்.
*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### கும்பம்
வீட்டில் கருத்து வேற்றுமை ஏற்படும். புதிய பொறுப்புகள் அதிகரிக்கும். உடல் நிலைப் பாதிப்பு வயிற்றுநோ - தோல் வருத்தம் என்பன கொடுக்கும். இடமாற்றங்களை தவிர்க்கவும். வியாபாரிகள் ஆசிரியர்கள், பாதுகாப்புத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.
*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள்.*

### மீனம்
வாக்குக்கலகம். நல்லது கெட்டது கலந்து நடக்கும். பிரயாணத்தொல்லைகள் கொடுக்கும். தொழிலில் - தூரஇடங்களிலிருந்து புதிய செய்திகள் வரும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை வரும். பணவரவு திடீரென தொழில் முறையில் வர இடமுண்டு. விஷ பயம் உண்டு. வியாபாரிகள், ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.
*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள்.*

**மகாதேவா ஜோதிடம்**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய மிருதங்கம், தபேலா, டோல்கி, கெஞ்சிரா, உடுக்கு போன்றவை விற்பனைக்குண்டு. ஓடருக்கும் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும். தொடர்பு: கோவிந்த பிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P.:021 4590382. (39100)

பருத்தித்துறை, முதலாம் கட்டைச் சந்தி (பிரதான வீதியில்) 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V.யோகேஸ்வரி, வியாபாரி மூலை, பருத்தித்துறை.T.P.:2263278. (சி-42712)

புதிய டிஜிற்றல் வீடியோ JVC Model No - 160x, டிஜிற்றல் கமெரா Casio Qv-R40, கையடக்கத் தொலைபேசி motorola V545, கையடக்கத் தொலைபேசி NOKIA 8310 என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 234, கே. கே.எஸ்.வீதி, யாழ்ப் பாணம், தொலைபேசி. 021 222 2573. (சி-44554)

Love Birds மற்றும் இங்கிலீஷ் நண்ஸ், பியூட்டி ஹோமர், றேஸில் ஹோமர், ஜக்கோப் பியன், ஜேர்மன் அவுல், நண்ஸ் இஜிப்ஷன், பான்ரெல் போன்ற பலவகையான புறாக்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு K.ரட்ணம் இல.1, மஹாத்மா வீதி, நெல்லியடி. 0777 - 779975. (39128)

## வீடு விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு, வைரவர் கோயிலடியில் இரண்டு வீடுகளுடன் 2 பரப்பு 2 குழி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0112-543549. (39163)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

21-08-2005 எமது ஸ்தாபனத்தில் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: லிங்கம் கிறீம் ஹவுஸ், 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (39159)

## தவறிவிட்டது

**Nokia 6610 Phone** மானிப்பாயிற்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்துகீழ் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ.சபேசன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். T.P.: 0776 258050 (39146)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ (எல்லா சபைகளைச் சேர்ந்த) மணமக்களின் ஜாதகங்களும் உள்ளன. தொடர்பு: கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (39162)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 07-08-1979ஆம் ஆண்டு, உத்தராடம் நட்சத்திரத்தில் பிறந்த, பாவம் 40 உள்ள மணமகனுக்கு நல்ல குணமுடைய, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 3086797. (சி-44715)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

*10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (றீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.*

## காணி விற்பனைக்கு

யாழ்.திருநெல்வேலி வடக்கு, பணிக்க வளவு ஒழுங்கை (திருநெல்வேலிச் சந்திக்கு அருகில்) இரு துண்டுக்காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 2392671.(39160)

## கதியால் விற்பனைக்கு

கிழுவங்கதியால் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.மதிவர்ணன், அச்சுவேலி வீதி, நவற்கிரிச் சந்தி. புத்தூர்.T.P.: 2223772. (39161)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் 42/=, பேட்டுக்குஞ்சுகள் 22.08.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38679)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 77ஆம் ஆண்டு பிறந்த, அழகிய, பட்டதாரி மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், உயர் பதவி வகிக்கும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2678, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (39154)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 74ஆம் ஆண்டு பிறந்த, M.A. பட்டதாரி மணமகளுக்கு அரச தொழில் புரியும் பட்டதாரி மணமகன் தேவை. தொடர்பு: பண்டத்தரிப்பு விளம்பர இல. 2677, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (39153)

## அரசும் புலிகளும் நேரடிப் பேச்சா? சீறுகிறது ஹெலஉறுமய!

கொழும்பு, ஓக. 22

போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் அரசுக்கும் புலிகளுக்கு இடையில் நேரடிப் பேச்சுகள் இடம்பெறுவதைத் தாங்கள் கடுமையாக எதிர்ப்பதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் தங்களது ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு ஆயுதங்களை ஒப்படைத்தால் மட்டுமே அவர்களுடன் பேச்சுகள் இடம்பெறவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேத்தானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய போர் நிறுத்த உடன்படிக்கையில் ஆயிரக்கணக்கில் மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் பெரும்பகுதி புலிகளால் ஏற்பட்ட மீறல்களாகும். அதனால் இந்த உடன்படிக்கைக்கு எந்த மதிப்பும் கிடையாது - என்றும் மேத்தானந்த தேரர் மேலும் கூறுயுள்ளார். (த-9)


உ

## ஸ்ரீ சட்டநாத சிவன் கோயில், நல்லூர்
## அந்தண சிவாச்சாரியார் தேவை

**ஆகம விதிப்படி நித்திய, நைமித்திய பூசைகளை நிறைவேற்றக்கூடிய முழுநேரக் குருக்கள் உடன் தேவை. தங்குமிட வசதிகள் உண்டு.**

தொடர்பு:
டாக்டர் கதிர்காமலிங்கம் செந்தில்குமரன்,
74, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(39158)(26.14.15)


## கண்ணீர் அஞ்சலிகள்

திருமதி **பரராஜசிங்கம் கிருஷ்ணவதி**



17.08.2005 அன்று காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*27/11, இந்துமதி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (39151)

திரு. திருமதி சண்முகராஜா குடும்பத்தினர். (பிரான்ஸ்).


## யாழ்.றோட்டறிக் கழகம்

இலவச GIT(General Information Technology) வகுப்புகள்

யாழ்.றோட்டறிக் கழகமும் Newark றோட்டறிக்கழகமும் இணைந்து வழங்கும் சேவை

க.பொ.த.(உ/த) 2007 ஆம் ஆண்டு பரீட்சை

*பயிற்சி நிலையங்கள்:*

*1. வல்லிபுர ஆழ்வார் ஆலய*
UNIVERSAL TECHNOLOGY CENTRE
*(இருபாலாரும்)*
*ஆரம்பம்: 27-08-2005 காலை 10 மணி*

*2. வட இந்து மகளிர் கல்லூரி (பெண்கள் மட்டும்)*
*ஆரம்பம்: 27-08-2005 மதியம் 12 மணி*

வகுப்பில் இணைய விரும்பும் மாணவர்கள் உதவிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல், கல்வி வலயம், வடமராட்சி) அவர்களுடன் 26-08-2005 இற்கு முன் தொடர்புகொள்ளவும்)

பயிற்சியில் இணையவிரும்பும் மாணவர்கள் குறித்த நிலையத்தில் குறித்த நேரத்தில் சமுகந்தரவும்.

(சி-44717)(26-14-15) - யாழ்.றோட்டறிக்கழகம்.

## WANTED LOCUM DOCTORS

IoFM attached DCCs, at Chavakachcheri and Jaffna are in need of locum doctors to work on a sessional basis.

- Those who want to take up family medicine as a career or interested in doing research will be benefited.
- Those who are willing to work for the Institute of Family Medicine (IoFM) for a period of 2 years full time or partime equivalent of this duration will be encouraged to do Post - Graduate exams (MD Family Medicine, SL or MRCGP, UK) and also granted an year of UK working experience.
- An attractive remuneration will be paid for the service, which is subject to negotiation.

For further details e-mail to *admin@miot.org.uk*

**INSTITUTE OF FAMILY MEDICINE**
**125, Main street, Jaffna.**


## கண்ணீர் அஞ்சலி



*யாழ்ப்பாண இரும்பக உரிமையாளர்கள்*
திரு.ப.ஸ்ரீகரன், ப.ஸ்ரீமுகுந்தன்
*ஆகியோரின் அன்புத் தாயார்*

திருமதி
**பரராஜசிங்கம் கிருஷ்ணவதி**

அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கு இதய பூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள், ஏசியன் பெயின்ற்ஸ்,
யாழ்.விநியோக நிலையம், யாழ்ப்பாண இரும்பகம்,
(C/44704)(26.14.15) 32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## ஒரு வருட பூர்த்தியில்...

**யாழ். மண்ணில் லேசர் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி ஒரு வருட பூர்த்தியை விரைவில் கொண்டாடவுள்ளோம். இதனை முன்னிட்டு -**

- 01-09-2005 முதல் எம்மிடம் புகைப்படச் சுருள்களை பிரதியாக்கம் செய்பவர்களுக்கு (Studio) இலவசமாக அல்பங்களைக் கட்டித் தருகின்றோம்.
- படங்களை இலவசமாக CD யில் பதிவுசெய்து தருகின்றோம்.
- மிகக் குறைந்த கட்டணத்தில் டிசைனிங், பிரிண்டிங்
- நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வியாபார நிறுவனங்களுக்கான 06 அடி அகலத்தில் பனர்கள், டிஜிட்டல் போட் என்பவற்றைக் குறைந்த கட்டணத்தில் செய்து தருகின்றோம்.
- உங்கள் இல்லங்களில் நடைபெறுகின்ற அனைத்து மங்களகரமான நிகழ்வுகளையும் டிஜிட்டல் வீடியோ, போட்டோவாகப் பிடித்துத் தருகின்றோம்.

## பூர்த்தி லேசர் டிஜிட்டல் கலர் லாப்

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/44595) T.P.: 2222884. கிளை: யாழ். வீதி, மானிப்பாய்.


## 20.08.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300506400 இலிருந்து 300523138 வரை

சீட்டிழுப்பு இல. 1634

வெற்றி எண்கள்: **37 45 46 55** சுப்பர் எண் **12**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.20,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 20,00,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 25 | 5,000/- | 1,25,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 436 | 1,000/- | 4,36,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,382 | 500/- | 6,91,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,291 | 40/- | 8,51,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,232 | 20/- | 4,04,640/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,02,318 | 10/- | 30,23,180/- |
| | | மொத்தம் | 75,31,460/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 80,31,460/- |

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 28,07,800/-**

தொடர் இல. 200545686 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 24 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 300521377-1-93 |
| பதுளை | 300509132-0-60 |
| குருநாகல் | 300509910-7-64 |
| நுவரெலியா | 300520289-3-07 |
| இரத்தினபுரி | 300508645-3-65 |

வளமான வாழ்விற்கு

இல. 33, சென்ற் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு அருள்மிகு

## ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

# மகா கும்பாபிசேகம்

சிவ பூமியாகிய இலங்கையின் வட பகுதியில் நெல் விளையும் வயல்களும், நீர் நிறை குளங்களும், செழிப்புற விளங்கும் வன்னி மாநிலத்தே சீர் மிகு கல்வியும், உழைப்பால் உறைந்த செல்வமும், தர்ம சிந்தையும், பண்டார வன்னியன் நெறிதவறாத வீரமும், செந்தமிழ் மரபும் நிறைந்த மக்கள் வாழும் புதுக்குடியிருப்பு நகரில் புராதனமாக கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்துவரும் ஸ்ரீ முருகப் பெருமான் திருக்கோயில் துணை கூப்பி உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் வாழும் மெய்யன்பர்களின் பொருள் உதவியுடன் ஆலய பரிபாலன சபையினரின் அயராத பெரும் முயற்சியால் அழகிய மண்டபங்கள் அமைத்து அதிசுந்தர திருத்தல விமானம் அமைத்து குவலயத்திலே வீற்றிருக்கும் ஞானவேலாயுதப் பெருமானுக்கும், விநாயகர், கயலட்சுமி, நடேசர், முத்துக்குமார சுவாமி, ஆறுமுகசுவாமி, வசந்தமண்டபம், நவக்கிரகம், தட்சணாமூர்த்தி, வைரவர், சண்டேஷ்வரர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் பார்த்திப வருடம் ஆவணி மாதம் ஆறாம் நாள் (22.08.2005) திங்கட்கிழமை திரிதியை திரியும், உத்தரட்டாதி நட்சத்திரமும், சித்த யோகமும், கன்னி லக்கினமும் கூடிய காலை 9 மணி10 நிமிடம் முதல் 10.30 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மகா கும்பாபிசேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

சர்வேஸ்வரக் குருக்கள்

அருள் வேண்டி நிற்கும்

யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மசி
YARL BABY NEEDS & PHARMACY

சன்றைஸ் மெடி கிளினிக்
SUN RISE MEDI CLINIC

(சி-44719)

## சந்நிதிகளில்

ஒட்டுசுட்டான்,ஓக.22

ஒட்டுசுட்டான், கற்சிலைமடு சமளந்துளாய் ஸ்ரீ விநாயகர் ஆலய மகா கும்பாபிசேகம் இன்று காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து மண்டலாபிசேகமும் நடை பெறும்.

(ஓ-341)

* * *

சுழிபுரம்,ஓக.22

சுழிபுரம் சித்தில் காட்டுப்புலம் ஐயனார் ஆலய மகா கும்பாபிசேகம் இன்று காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து கால் மண்டல மண்டலாபிசேகம் நடைபெறும்.

(ஓ-28-203)

* * *

ஊர்கா.,ஓக.22

ஊர்காவற்றுறை, கரம்பொன்கிழக்கு வட்டுவில் முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழா நாள்களில் தினமும் மு.ப. 10 மணிக்கு விசேட அபிசேகமும் மு.ப.11 மணிக்கு விசேட பூசையும் மு.ப. 11.30 மணிக்கு சுவாமி வீதியுலா வருதலும் இடம் பெறும். (ஓ-203)

* * *

சங்குவேலி, கலட்டி சித்தஞானவைரவ சுவாமி ஆலய கும்பாபிசேகம் இன்று காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அருட்கவி சீ.விநாசித்தம்பி, செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோருடைய அருளுரைகள் இடம்பெறும். (ஓ-152-203)

ஓவ்செட் மெசின் மைன்டர் தேவை

ஓவ்செட் மெசின் மைன்டர் (A/3 டேவிசன்) கணனித் தட்டச்சாளர் (Computer), பைன்டர் உடன் தேவை. நேரில்வரவும்.

தயா அச்சகம்
ஓவ்செட் பிறிண்டேர்ஸ்
138, நாவலர் வீதி, (நாவலர் பாடசாலை முன்பாக), யாழ்ப்பாணம்.

(சி/44722)

GUDWIL

குட்வில் உழவு இயந்திரம் விற்பனைக்கு


மீண்டும் யாழ் மண்ணில்


சிறிய அளவிலான உழவு இயந்திரம், உதிரிப் பாகங்கள் மற்றும் விவசாயிக்கு தேவையான சகல வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

நேரில் வந்து பெற்றுக்கொள்ள முடியும்

தொடர்புகளுக்கு:-
R. கோகுலன்
T. K. ருவரிஸ்ட் இன்
No:200, கந்தர்மடச்சந்தி,
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone:-
077 - 3086915
021 - 2225680

(38124) (54)

# மரண அறிவித்தல்கள்

## சறோஜினிதேவி வையாபுரி



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி வையாபுரி சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகசாமி - அன்னலட்சுமி தம்பதியரின் ஏகபுத்திரியும் சு.வையாபுரி (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும் வசந்தி (லண்டன்), சுரேஸ் (கிராம உத்தியோகத்தர்), ஆனந்தி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவி (லண்டன்), ஜெயக்குமார் (டென்மார்க்) ஆகியோரின் மாமியாரும் கரிகரன், ஜோஷ்கோபி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2005) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, பொன்னப்பா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(39175) (33-11-13-34)

தகவல்:
வை.சுரேஸ் (மகன்).
(கிராம உத்தியோகத்தர், ஜயனார் கோயிலடி - J/97)

## திரு. தர்மலிங்கம் லிங்கேஸ்வரன்
(லிங்கம்)

கருகம்பனை, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திரு. தர்மலிங்கம் லிங்கேஸ்வரன் (லிங்கம்) அவர்கள் 16.08.2005 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞான வைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். 021 4591843
(சி/44720) (33-11-13-34)

தகவல்:
தர்மகுலசிங்கம்
குடும்பத்தினர்.

## நாகராசா கேதீஸ்வரன் (கேதா) நயினாதீவு



நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகராசா கேதீஸ்வரன் நேற்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை அகாலமரணமானார்.

அன்னார் நாகராசா - காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் துஷ்யந்தன், கௌதமன், கஜலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் மங்களேஸ்வரன், கோணேஸ்வரி, விக்கினேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கேதீஸ்வரன் (தபாலதிபர்), பரமேஸ்வரன் (ஜேர்மனி), புவனேஸ்வரி, பரிமளாதேவி (நோர்வே), சுதாகரன்(ஜேர்மனி), வியேந்திரன் (சமுர்த்தி வங்கி, வேலணை), விஜயகுமார், தர்சினி (பிரான்ஸ்), தனுஷியா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2005) திங்கட்கிழமை பி.ப 4 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிவரவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(39168) (33-11-13-34)

தகவல்:
க. கேதீஸ்வரன் (மைத்துனர்),
நா.மங்களேஸ்வரன் (சகோதரன்).

## திருமதி காந்தமலர் திருவிளங்கம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காந்தமலர் திருவிளங்கம் 20.08.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் - ராசம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்து - இராமாசிப்பிள்ளையின் மருமகளும் திருவிளங்கத்தின் அன்பு மனைவியும் யாழினி, அச்சுதன் (Jaffna Commersal Bank Security officer) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராசாவின் மாமியும் யோகிதனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.08.2005 சனிக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பழை. (சி/44723) (33-11-13-34)

தகவல்:
அச்சுதன் (மகன்).

## விண்ணக வாழ்வில் ஆண்டுகள் ஐந்து

# நாகசுந்தரம் ஏகாம்பரம்



(ஏகாம்பரம் அன் சன்ஸ், ஏகாம்பரம் மில் ஸ்தாபகரும் உரிமையாளரும்)

திதி: 22.08.2005

மண்ணில்: 01.03.1943
விண்ணில்: 18.08.2000

82, செல்லர் வீதி,
நல்லூர்.
(39176) (33-34-12-21)

தகவல்:
குடும்பத்தினர்

## விபத்தில் காயம்!

தென்மராட்சி,ஓக.22

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணுக்கு வலிப்பு ஏற்பட்டு தவறி வீழ்ந்ததில் தலையில் காயமேற்பட்டது.

நேற்றுக்காலை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

(ஓ-117)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத்,
ரேணுகா மேனன்

பெப்ரவரி 14

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

(சி-43380)

நாதன்ஸ் சினிமா

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின்
நகைச்சுவைச் சித்திரம்

இங்கிலீஸ்காரன்

கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)

(சி-43363)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



தாஸ்

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

(சி-4118)

மனோகரா யாழ்ப்பாணம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஸ்ராஜ்
நடித்த

அந்நியன்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.
(பு.நே.)

(சி-44110)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



விசேட வேவுப் புலி
கப்டன் கிருஷ்ணா
(கோபால்)

### மாணிக்கம் சிவகிருஷ்ணன்

மழலையாய்
13.02.1972

மாவீரனாய்
12.09.1995

பாசமலர் ஒன்று மண்ணில் சாய்ந்தது
பாசம் நிறைந்தோர் கதறி அழுதனர்
தேசம் எங்கும் செந்தணல் ஆனது
அண்ணன் அணியில் - அரும் பங்காற்றினாய்
வீரத்தோடு நின்று களம்பல கண்டாய்
மண்ணையே நேசித்து - மண்ணிலே விதையானாய்.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.
(39166) (33-11-13-34)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.



கடற்கொந்தளிப்பால் சென்னை மெரீனாக் கடற்கரை உட்படப் பல்வேறு பகுதிகளில் கடல் உட்புகுந்து ஏற்படுத்திய பாதிப்புகளைப் படங்களில் காணலாம்.

## இரும்புக் குழாய் பாய்ந்து குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஓக.22

தொலைக்காட்சி அன்ரனாவைப் பொருத்த முற்பட்டவேளை, அதன் இரும்புக் குழாய் உடைந்து வீழ்ந்து உடலில் பாய்ந்ததால் படுகாயமடைந்தார் எனக் கூறி நேற்றுமுன் தினம் இரவு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த நாகராசா கேதீஸ்வரன் (வயது-38) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். சடலம் மரண விசாரணை, பிரேத பரிசோதனை என்பவற்றின் பின்னர் உறவினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (ஒ-12)

## சிசுவின் தலை மீட்பு!

யாழ்ப்பாணம்,ஓக.22

பிறந்து சில மாதங்களேயான சிசு ஒன்றின் துண்டிக்கப்பட்ட தலை கொடிகாமம் பொலீஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு 7.30 மணியளவில் பொலீஸாரினால் கொண்டுவரப்பட்ட மேற்படி சிசுவின் தலைப்பகுதி விசாரணையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

# ஜப்பானில் நேற்றும் நிலநடுக்கம்: தமிழகத்தில் கடல் கொந்தளிப்பு!

ஜப்பானில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதேசமயம் தமிழகத்தின் கிழக்குக் கடலில் மூன்றாவது நாளாக நேற்றும் கொந்தளிப்பு நிலவியது.

ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவிலிருந்து வடக்கே 200 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நில்கதா நகரை மையமாகக் கொண்டு நேற்றுக்காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் இது 5 புள்ளிகளாகப் பதிவாகியது. இதில் கட்டடங்கள் சில சேதமடைந்தன. கடந்த 16ஆம் திகதி நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

இதேவேளை, தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப்பகுதியில் கடந்த மூன்று நாள்களாகக் கடலில் கொந்தளிப்பு நிலவுகிறது. இதனால், கரையைத் தாண்டி கடல் அலை குடியிருப்புகளுக்குள் புகுந்துள்ளது. சென்னை எண்ணூர் முதல் கடலூர் வரையான கடலோரப் பிரதேசம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாள்களாக தமிழகக் கடற்றொழிலாளர்கள் கடல் கொந்தளிப்புக் காரணமாகக் கடலுக்குள் செல்லவில்லை. கடலலை வழமையைவிட முழுநிலா, அமாவாசை போன்ற தினங்களில் அதிக உயரத்திற்கு எழுவதுண்டு. ஆனால், அதனையும் விட பல அடிகள் உயரத்துக்கு தற்போது அலைகள் எழுகின்றன. இதனைத் தொடர்ந்து கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ஒ-12)

## ஆபி. - ஆசியா கிரிக்கெட்

ஆசிய, ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளும் வெற்றிக்கிண்ணத்தைப் பகிர்ந்துகொண்டன. முதல் போட்டியில் ஆபிரிக்காவும், இரண்டாவது போட்டியில் ஆசிய அணியும் வெற்றிபெற்றன. இத்தொடரின் கடைசிப்போட்டி டர்பன் நகரில் நேற்று நடந்தது. மழை மற்றும் மைதானத்தின் ஈரம் காரணமாக போட்டி தாமதமாக ஆரம்பமாகியதால் 48 ஓவர்களாக குறைக்கப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆபிரிக்க அணி 32.5 ஓவரில் 106 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அடுத்து துடுப்பெடுத்தாடிய ஆசிய அணி 2 விக்கெட் இழப்புக்கு 8 ஓட்டங்களுடன் இருந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டது. ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் அக்தரும், தொடர் நாயகனாக இந்தியாவின் ஷிகிர்கானும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-12)

## பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் சார்பில் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவையும், முக்கிய அமைச்சர்கள் இருவரையும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளச் செய்வதற்கு ஜனாதிபதி ஆர்வம் கொண்டிருக்கிறார் என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, டியூ. குணசேகர ஆகியோர் அரசாங்கத்தின் சார்பில் பேச்சுக்களில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, இந்தப் பேச்சுகள் தொடர்பில் நேற்று 'உதயனு'க்கு கருத்துத் தெரிவித்த கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தின் அதிகாரியான ரொம் க்னாப்ஸ்கொங், பேச்சுக்களின் திகதி மற்றும் இடத்தை நிர்ணயிப்பதற்கான நடவடிக்கைகளில் நோர்வே அனுசரணையாளர்கள் முழு மூச்சில் ஈடுபட்டு வருகின்றனர் எனக் கூறினார். (க)

## சேதுகால்வாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான சட்டத்தரணி சி.தம்பையா இதுபற்றித் தெரிவிக்கையில்:-

சேது சமுத்திரத்திட்டம் இலங்கைக்கு மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

யாழ்ப்பாணக் கரையோரத்திற்கு பாரிய கடலரிப்பு ஏற்படும். ஆகவேதான், இத்திட்டம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனக்கோரி நாம் ஆர்ப்பாட்டத்தில் குதிக்கின்றோம்.

நாளை ஆர்ப்பாட்டத்தின் முடிவில் இத்திட்டத்தைத் தடுத்துநிறுத்தக்கோரும் மகஜர் ஒன்றும் இந்திய தூதுவரிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (க)

## ஜே.வி.பியினருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியமாக தேர்தல் உடன்பாடு ஒன்றை ஜே.வி.பி.யுடன் செய்து கொள்ளப் பிரதமர் ஏற்பாடுகளைச் செய்துவருகிறார் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமரின் இந்தச் செயல் சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்களான ஜோன் செனவிரத்ன, மஹிந்த யாப்பா அபேவர்தன, நிமால் சிறிபால டி சில்வா மற்றும் பிரதி அமைச்சர்களின் ஒன்றியத் தலைவர் டிலான் பெரேரா ஆகியோருக்கும் கட்சியின் பெரும்பாலானவர்களுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது என்றும் தகவல்கள் கசிகின்றன.

தமது அதிருப்தியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவிக்கும் அமைச்சர்கள், இதுபற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் அறிவித்துள்ளனராம். (க)

## புலிகளுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறின்றி, இப்பேச்சின் உண்மை யான நோக்கத்தை அரசு அடைய வேண்டும் என்றால், அதனை ஆரம்பிப்பதற்குமுன் அரசு பல மாற்றங்களைச் செய்யவேண்டும்.

முதலில் சமாதானப் பேச்சின் மத்தியஸ்தராகவுள்ள நோர்வேயை மத்தியஸ்தம் வகிக்கும் பணியில் இருந்து அரசு விலக்க வேண்டும். பேச்சுக்குப் பிராந்திய நாடுகளே மத்தியஸ்தம் வகிக்க வேண்டும்.

அதன்பின் இப்போதைய சமாதான உடன்படிக்கையில் இருந்து அரசு விலகி, புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும். அதன்பின்னர் புலிகளை இலங்கையில் தடைசெய்யவேண்டும். அதன்பின் பேச்சைத் தொடங்கவேண்டும்.

இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்திய பின்பே அரசு புலிகளுடன் பேசவேண்டும். இல்லையேல் அரசின் முயற்சி வீணாகிவிடும். -இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமரையே கொலை செய்தவர்கள் விடுதலைப் புலிகள். அப்படியிருக்கையில் ஒப்பந்தம் குறித்து அவர்களுடன் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை என்பதுதான் எமது கருத்து.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பெயரில் சிறப்புரிமைகளையும், சலுகைகளையும் பெற்று தேசிய பாதுகாப்பிற்கே அச்சுறுத்தலாக புலிகள் செயற்படுகின்றனர். தமது நோக்கங்களை அடைய அவர்கள் ஒப்பந்தத்தைப் பயன்படுத்துகின்றனர். எனவேதான் நாம் அதனை ஆட்சேபிக்கிறோம்.

ஜனநாயக அடிப்படையில் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுடன் அரசு பேசுவதனை ஜே.வி.பி. ஒருபோதும் எதிர்க்காது. - இவ்வாறு சந்திரசேன விஜேசிங்க மேலும் கூறினார். (க)

## கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன் மட்டுமன்றி இன்னும் பல நாடுகளும் உதவ முன்வந்துள்ளன. இவற்றின் உதவிகளைப் பெறுவது தொடர்பாக பொலீஸ் திணைக்களம் இன்னும் தீர்மானிக்கவில்லை.

விரைவில் இதுகுறித்துக் கலந்துரையாடி ஒரு முடிவு எடுக்கப்படும்" என்றார் பொலீஸ்மா அதிபர்.

இதேவேளை, இந்த விசாரணைக்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைப் பெறுவதற்கான அவசியம் ஏற்படவில்லையென புலன் விசாரணையை மேற்கொள்ளும் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (க)

## கடலில் மூழ்கி 3 மாணவர் பலி!

கொழும்பு மோதரை கடற்பகுதியில் நேற்று குளிக்கச்சென்ற மாணவர்கள் மூவர் கடற் சுழியில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

நேற்றிரவு மூவரினது சடலங்களும் கடற்படையினரால் மீட்கப்பட்டன. உயிரிழந்த மாணவர்கள் மூவரும் கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

ஆராச்சிகே ரசிது பீரிஸ், விதானகே லலித் பிரசன்ன, பாகியாசன் கல்ப ஆகிய மூவருமே உயிரிழந்தவர்களாவர். (க-12)

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துமாறு தேர்தல் ஆணையாளரைத் தாம் கோரினார் எனவும் - அதுபற்றிய பதில் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லையென்றும் - மனுதாரர் தமது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார். எனவே, தேர்தலை இந்த ஆண்டே நடத்த உத்தரவிடவேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார். தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்ட மாஅதிபர் ஆகியோர் அந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரதிவாதி என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றத்திற்கு சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் பதிலளித்திருந்த தேர்தல் ஆணையாளர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் 22-12-1999 இல் ஆரம்பமாகிறது என்பதைத் தாம் ஏற்கிறார் எனவும் -

இதற்கமைய அரசமைப்பில் குறிப்பிடப்பட்டவாறு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தாம் மேற்கொண்டிருக்கிறார் எனவும் - கூறியிருந்தார்.

ஜாதிக ஹெல உறுமய தாக்கல் செய்த மனுவிற்கு மேலதிகமாக, ஜனாதிபதித் தேர்தல் எந்த வருடத்தில் நடத்தப்படவேண்டும் என உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டுஜனாதிபதி அனுப்பிய கடிதமும் இந்த மனுவுடன் பரிசீலிக்கப்படவுள்ளது.

இந்த மனு விசாரணையில் தம்மையும் சேர்த்துக்கொள்ளுமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, லிபரல் கட்சியின் செயலாளர் ஜீவ் விஜேசிங்க மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினர் ஆகியோரும் தனித் தனியே மூன்று இடையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருடமே நடத்துவதற்கு உத்தரவிடவேண்டுமெனக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இடையீட்டு மனுக்களை அனுமதிப்பதா என்பது பற்றியும் இன்று உயர்நீதிமன்றம் பரிசீலிக்கவுள்ளது. (க)

## ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றுமே ஏற்றுக்கொள்ளப்படமுடியாதவை.

வெள்ளவத்தையில் அமைந்துள்ள 'உதயன்' - 'சுடர்ஒளி' கிளைப் பணிமனை மீதான தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இத்தாக்குதலை நடத்திய சக்திகளுக்கு இவ்வேளையில் கடும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் தமிழ் ஊடகங்கள் மீதும் தொடர்ச்சியாக இவ்வாறான வன்முறைகளை கட்டவிழ்த்து விடும் சக்திகள் எவ்வேளையிலும் வெற்றிபெறப் போவதில்லையென்பதை உறுதியாக இச்சந்தர்ப்பத்தில் நாம் சொல்லிவைக்க விரும்புகின்றோம்.

வெறுமனே கண்டனங்களை மட்டும் வெளியிட்டுக்கொண்டிருப்பதற்கு அப்பால் உறுதியாக நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு ஊடக சுதந்திரத்திற்காக குரல் கொடுக்க அணிதிரளுமாறும் அழைப்பு விடுகின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

(மேலும் செய்திகள் 2ஆம் பக்கத்தில்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குமாரசாமி இராசம்மா



சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி குமாரசாமி இராசம்மா அவர்கள் நேற்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மு.குமாரசாமியின் அன்பு மனைவியும் திருமதி பத்மராணி, குணேஸ்வரன் (கணக்காளர் - சம்பியன் புட் நிறுவனம் - கொழும்பு), சுந்தரேஸ்வரன் (லண்டன்), ஜெயசஸ்வரன் (ஆசிரியர் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பரமானந்தராசா, கனகலட்சுமி, பத்மினி, விஜயலட்சுமி ஆகியோரின் மாமியாரும் பார்த்தீபனின் (ஆசிரியர் - தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்) பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2005) திங்கட்கிழமை இடம்பெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் கொட்டுப்பனை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆலங்குழாய் வீதி,
முருகமூர்த்தி கோயிலடி,
சண்டிலிப்பாய் வடக்கு.
த.ஜெயசஸ்வரன் (மகன்).
(39177)(33-12-34-11)

### திருமதி பாக்கியம் கந்தசாமி

நவாலியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் கந்தசாமி (முன்னாள் அதிபர் - உயரப்புலம் றோ.க.த.க. பாடசாலை) அவர்கள் நேற்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யாழ். போதனா வைத்தியசாலை எழுதுவினைஞர் திருநாவுக்கரசு கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் ஜீவானந், தயானந், விஜயானந் ஆகியோரின் தாயாரும், வண. பிரபாகர் இராஜசேகர் (தென்னிந்தியத் திருச்சபைப் போதகர்) அவர்களின் மாமியாரும் எல்சி, ஜெஷானா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சென். பீற்றேஸ் லேன்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
திருமதி ஞானம்மா இரத்தினம் (சகோதரி).
(39152)(25-18-15)

N.C.A
K.K.S Road Inuvil
பௌதிகவியல்
திரு.N.ரவி
இரசாயனவியல்
திரு.N.ஜனமேஜன்
A/L 2007
புதிய பிரிவுகள் ஆரம்பம்
22.08.2005
மாலை 4.00 மணி

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.